ஏனைய ஸ்தலங்கள்

அத்திப்பட்டு முதல் க்ஷேத்திரக்கோவை வரை

பாடல்கள்: 203-322 & 503

எண்	பாடல்
	அததிபபடடு
203	கருகி யறி வகல
	அவிநாசி
204	இறவாமற
205	மனத்திரைந்
	ஆய்க்குடி
206	வாட்பட
	இராமேசுரம்
207	வால வயதாகி
	உததரமேரூர்
208	கருதி மறைக
209	தோலெ ழுமபு
	எடடிகுடி
210	ஒருகு வைமம்பு
	எண்கண
211	சந்தனநு
	எழுகரைநாடு
212	விரகற நோககி
	கந்தனூர்
213	விந்து பேதிதத

எண்	பாடல்
	கந்தனகுடி
214	எந்தன் சடல
	கருவூர்
215	தசையாகிய
216	நித்தப் பிணி
217	மதியால விததக
	காசி
218	தாரணிக கதி
219	வேழமுணட
	கும்பகோணம்
220	கருத்த குழலி
221	செனிததிரு
	கூந்தனூர்
222	தரையினில்
	கோடிநகர்
223	நீல முகிலான
	கோடைநகர்
224	ஆதிமுதலனி
225	சால நிலம் நாள்
226	ஞாலமெங்கு
227	தோழமை கொண

எண்	பாடல்
	சிக்கல்
228	புலவரை ரக்ஷிககம
	சிவபுரம்
229	மனமெனும் பொருள்
	சிறுவை
230	அண்டர் பதி
231	சீதன வாரிஜ
232	பிறவியான சட
	சீகாழி
233	ஊனத்தசை
234	சருவியிகழந்து
235	தினமணி சார்ங்க
236	பூமாதுரமே
	சேலம்
237	பரிவுறு நாரற
	சோமநாதனமடம்
238	ஒரு வழிபடாது
	சோமீசுரம்
239	உரிய தவநெறி
	தனிச்சயம்
240	உரைதத சம்ப்ரம

எண	பாடல்
	திருக்கடவூர
241	ஏடவின விதிப்
	திருக்குடவாயில்
242	சுருதியாயியவா
	திருக்குரங்காடுதுறை
243	அலங்கார முடி
	திருக்குற்றாலம்
244	வேததததிற
	திருச்செங்காட்டங்குடி
245	வங்கார மார்பி
	திருநள்ளாறு
246	பச்சை யொண்
	திருநாகேச்சுரம்
247	ஆசார வீனக
	திருநெலவாயில்
248	அறிவிலாதவ
	திருப்பந்தணைநல்லூர்
249	கிருவினையகசு வருவினை
	திருப்பாதிரிப்புலியூர்
250	நினைமொடு குருதி

எண	பாடல்	எண	பாடல்
	திருப்பாண்டிக் கொடுமுடி		திருவிதாயம்
251	இரு வினை பிறவி	263	மருமலவியார
	திருப்புக்கொளியூர		திரு வாஞசியம்
252	பக்குவ ஆசார	264	இபமாந்தர்
	திருப்பெருந்துறை		திருவாடானை
253	இரத்தமுரு	265	உனருரும் உட
	திருப்போரூர்		திருவாரூர்
254	திமிர மாமன	266	நீதான் எத்தனை
	திருமயிலை	267	பாலோதேனோ பல
255	அமரு மமரரி	268	பாலோ தேனோ மாகோ
256	அறமிலா அதி		திருவான்மியூர
257	இகல வருதிரை	269	குசமாகி யாரு
258	கடிய வேக மாருத		திருவிடைகழி
259	திரை வார	270	பகரு முத்தமிழ
	திருமாநதுறை	271	படிபுனல் நெருப்பு
260	ஆங்குடல் வளா	272	பழியுறு சடடக
	திருமுருகன்பூண்டி	273	மருக்குவாவிய
261	அவசியமுன		திருவீழிமிழலை
	திருவக்கரை	274	எருவாய கருவாய்
262	கலகலென		திருவேதசமாககூடல
		275	வண்டு போற

எண்	பாடல்	எண்	பாடல்
	திருவேடகம்		பாகை
276	சதுரத்தரை	288	ஈளகரம
277	மாத்திரையா		புனவாயில
	திருவேற்காடு	289	உரையுரு சென்றது
278	கார்ச்சார		பெருங்குடி
	திருவொற்றியூர	290	தலங்களில
279	சொருபப பிர		பேரூர்
	திருவோத்தூர	291	தீராப பிணி
280	தவர்வாட்		மதுராந்தகம்
	திலதைபபதி	292	குதிபாய்ந்தி
281	கிறையத்தனை	293	சயிலாங்கனை
	தேவனூர்		மதுரை
282	ஆறுமாறு மசசு	294	ஆனைமுகவற்கு
283	காலனைதது	295	கலைமேவு ஞான
284	தாரகாசுரன	296	நீதத்துவமாகி
	நாகபடடினம	297	பரவு நெருங கதி
285	நலமிடடிரை		மாயாபுரி
286	விருதா தெனவே	298	சிகரமருந்த
	நிம்பபுரம்		வடதிருமுல்லைவாயில்
287	அஙசு வித பூத	299	அணி செவ்வியார்

ஏனைய ஸ்தலங்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
	வடுகூர		வெள்ளிகரம்
300	அரிய மயனை	312	அடலரி மகவு
	வயலூர	313	கிலலை யென
301	அரிமருகோனே	314	சிகரிகளிடிய
302	எனைவல பிறகக	315	வதன சரோருக
303	குருதி கிருமிகள		வேதாரணியம்
304	தாமரையின	316	சுழல வினைக்கட
	வயிரவி வனம்		வேப்பூர
305	அருவரை யெடு	317	குரைகடலுல
	வாலிகொண்டபுரம்		வைத்தீசுரன் கோயில்
306	ஈயெறும்பு நரி	318	உரத்துறை
	விஜயபுரம	319	எத்தனை கோடி
307	குடல நிணமெனபு புலால	320	மாலினை வெருத்த
	விரிஞ்சிபுரம்		ஸ்ரீமுஷ்டம்
308	நிகரில பஞச	321	கழை முதது
309	மருவு மஞசு		க்ஷேத்திரக் கோவை
	விருததாசலம்	322	கும்பகோண மொ
310	திருமொழி		
311	பசையறற		மதுரை
		503	முதது நவரத்ன

திருபபுகழ பத விளக்கம்

		பக்கம்
1	திரு நாலு திசையில் அதிபா ...	121
2	கிருடிகள் எழு பேர	121
3	நவ நாதர்கள	121
4	அரிய சமயம் 4×6=24	121
5-7	மாயை ஐந்து, வேகம் ஐந்து, பூதம் ஐந்து நாதமஞ்சு	121
8	விதமுறு பரிவு - மூவகை அன்பு	122
9	ஓம் நம நாராயணய	122
10	புவி ஆதாரம் ஆயகைக்கு மூட்ட முறைகள நீதி நெறி விளககம் - வள்ளிச சன் மாரக்கம	122
11	சாத்திரம் ஆறு	123
12	அஞ்சு வித பூதம	123
13	கரணம் நாலு	123
14	நோய்கள மூனறு	123
15	வாக்குக்கு அருணகிரி	123
16	வெகு சாரி சதி தாண்டவத்தர் ...	123
17	சிகரம் அருந்த வாழ்வது சிவஞானம் ...	124
18	பன்னிரு சூரியாகள	124
19	பதி பசு பாசம்	124
20	அறுமுகவேள	124
21	பிரணவத்தின் பொருள்	124

அத்திப்பட்டு 203 (1)

3) பூர்வி கல்யாணி (9½) 1½+1+1½+1+2+1½+1

கருகி அறிவு அகல உயிர விட்டு (உ)க்கிக கிளைஞர்
கதறிஅழ விரசு பறை முட்டக கொட்டியிட
கனகமணி சிவிகையில் அமர்த்திக கடையினில்
இடை போடாக்

கரமலர் கொடு அரிசியினை இடுச சித்ர மிகு
கலையை உரி செய்து, மறைகள் பறைப் பறறு கனல்
கணகளென எரிய உடல் சுடுக கஷி. அவர் வழியேபோய்

மருவு புனல் முழுகி மனை புகுத் துக்கம அறு
மனிதர் தமை உறவு நிலை சுட்டுச் சுட்டியுற
மகிழ்வு செய்து அழுது பட வைத்தத துட்டன்
மதன் மலராலே

மயல் விளைய அரிவையர்கள் கைப்படு எய்தது மிக
மனம அழியும் அடிமையை நினைததுசு சொர்கக பதி
வழியை இது வழியென உரைத்துய் பெற கழல்கள் தருவாயே

பொரு இல மலைஅரையன அருள பசசைச் சிதர மயில்
புரம் எரிய கிரணிய தனுக கைபபற்றி (இ)யல்
புதிய முடு(கு) அரிய தவமுற்றுக கச்சியினில உற மேவும்

(203) (உடல்) வற்றித் தீர்ந்தது போலாகி, அறிவும் நீங்கி, உயிர் பிரிந்தவுடன், (கிளைஞர்) சுற்றத்தார் (உக்கி) உள்ளம் நைந்து கதறி அழ (விரவு) வந்து சேர்ந்த பறைகள் யாவும சப்திக்க, (கனக மணி) பொன் அழகு துலங்கு பல்லக்கில் உடல் கிடப்பட்டு (சுடுகாட்டில்) விறகுக் கட்டைகளின் மத்தியிலே போடப்பட்டு

(உறவினரின்) மலரான கைகளால் அரிசியிடப்பட்டு, அழகுள்ள துணியும் எடுபடப்பட்டு, உடலின் மறைவான இடங்களில் எல்லாம், (பறறு கனல் பற்ற) பிடிக்கின்ற நெருப்பு பற்றிக் கணகண என்று எரிய, உடலானது சுடப்பட்டு, பக்கத்தில் இருந்தவர்கள் தாம் வந்த வழியே திரும்பிப்போய்

பொருந்திய நீரில் முழுகி, வீட்டுக்குப் போய்த் துக்கம் நீங்குகின்றார்கள் மனிதர்கள் - (இத்தகைய மனிதர்களை), இன்ன உறவு இவர் என்று உறவு முறையைக் குறித்துக் குறிதது அத்தகைய குறிப்பால் (அவர் பொருட்டு) மகிழச்சி பூணவும், அழுது படுதலும ஏற்படவும், துஷ்டனை மனமதனது மயரம்பால்

காம உணர்ச்சி உண்டாகப் பெணகளின் கையில் அகப்பட்டு, இளைத்து மிகவும் மனம் நொந்து அழிதலையும் கொண்ட அடிமையை நீ நினைத்துச் சொர்கக லோக அருக்கு போகும வழியை 'இது தான வழியெனக் காட்டிச் சொல்லி உனது அழகிய திருவடிகளைத தந்து அருள்வாயே

தனக்கு நிகா இலலாத பரவத ராஜன் பெற்ற பச்சை அழகு மயில, திரிபுரம எரிய (மேருவாம்) பொனவில்லைக கைப்பற்றினவன் (இயல்) உருவமனுடன் (புதிய), அதிசயமான வகையில் உவகத்துடன் அருமையான தவத்தை மேற்கொண்டு காதசிப்பதியிற பொருநதி விளங்கும

புகழ் வனிதை தரு புதல்வ, பத்துக் கொத்து முடி
புயம் இருபது அறவு(ம்) எய்த சக்ரக் கைக் கடவுள்
பொறி அரவின் மிசை துயிலு சுத்தப் பச்சை முகில்
மருகோனே

அரிய மரகத மயில் உறவுக், கத்து கட
லது சுவற அசுரர் கிளை கெட்டுக கடையுற
அமரர்பதி இனிய குடி வைதத அற(கு) உற்ற மிகு
இளையோனே

அருண மணி வெயில் பரவு பததுத் திக்கு மிகு(ம்)
அழகு பொதி மதர் மகுட, தத்தித் தத்தி வளர்
அணிய கயல் உகளும் வயல் அத்திபபட்டில் உறை பெருமானே.

அவிநாசி 204

(4) காபி (2½) (-) (1+½)

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற்குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமானே

புகழ் பெற்ற தேவி பார்வதி அருளிய புதல்வனே! இராவணனுடைய (2)
பத்துக் கொத்தான தலைகளும், புயம் இருபதும் அற்று விழச் செலுத்
தின சக்ராயுதக் கையனான கடவுள், புள்ளிகளைக் கொண்ட ஆதி
சேடன் என்னும் பாம்பின் மேல் துயில் கொள்ளும் சுத்தமான
பச்சை நிற மேக வண்ணன் (திருமாலின்) மருகோனே!
அருமையான மரகத மயிலின் மீது வீற்றிருந்து, ஒலிக்கும் கடல்
சுவறவும், அசுரர் கூட்டம் அழிபட்டு (கட்டை யற - கடடற)
கடலோடு ஒழிய, தேவர் தலைவன் இந்திரன் சுகத்துடன், குடி ஏறு
தற்குத் தக்கபடி வைத்த மிக்க இளையவனே!
செம்மணிகள் பதித்துத் திக்குகளிலும் (வெயில் பரவு) ஒளி வீசி,
மிக்க அழகு நிறைந்து, (மதர்) செழிப்புடன் விளங்கும் (மகுட)
மணிமுடியை உடையவனே! குதித்துக் குதித்து வளர்கின்ற அழகிய
கயல் மீன்கள் தாவிக் குதிக்கும் வயல்கள் உள்ள அத்திப் பட்டில்
வீற்றிருக்கும் பெருமானே!

அவிநாசி 204

இறவா வரந் தருதும், பிறவா வரந் தருதும் -
எனை ஆண்டருளும் குருவாகியும்
வேறு துணையாகியும், நிலையான மோக்ஷ வீட்டைத் தந்தருள்வாயே
வள்ளியைச் சேர்வனே! குகனே! (எல்லாராலும்) புகழப்
படுகின்ற குமரேசனே!
அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும்
உபதேசிப்பவனே! அவிநாசியில் வீற்றிருக்கும் பெருமானே.

மனத்து கிளைந்து எழும் ஈனயும மேவிட
கறுத்த குச்சியுமே நரையாயிட
மலராக்கண் அண்டு இருளாகியுமே நடை தடுமாறி
வருத்தமுந் தர, தாய் மனையாள் மக
வெறுத்திடு அம்-கிளையோருடன யாவரும்
வசைக்குறுஞ் சொலினல் மிகவே தினம் நகையாட
எனக கடந்திடு பாசமுமே கொடு
கிளைத்து வந்து எதிர் சூலமுமே கையில்
எடுத்து எறிந்து அழல் வாய் விடவே பயம் உறவே தான்
கிழக்க வந்திடு தூதர்கள் அணவர்
பிடிக்கு முன்பு உன தாள் மலராகிய
இணைப்பதம் தரவே மயில் மீதினில் வரவேணும்
கனத்த செந்தமிழால் நினையே தினம
நினைக்கவும தருவாய் உனதாருள்,
கருத்து இருந்து உறைவாய் எனது அருயிர் துணையாக
கடற் சலம தனிலே ஒளி சூரனை
உடற் புகுந்து இரு கூறெனவே அது
கதித்து எழுந்து ஒரு சேவலும் மாமயில் விடும் வேலா
அனைத்தனும் கமலாலய மீதுறை
திருக் கலந்திடு மால் அடி நெடிய
அரற்கு அரும் பொருள்தான் உரை கூறிய குமரேசா

நெஞ்சிலே கிரைசசலுடன் எழுகின்ற கோழை அதிகரிக்கவும் ③
கரு நிறமுள்ள தலைமயிர் நரை கொண்டு வெளுக்கவும் தாமரை மலர
போன்ற கண்கள், இருள் அண்டுதலாகி- கண் பஞ்சடைந்து - பார்வை
குறையவும், நடை தடுமாற்றம் அடைவதாகியும்

துன்பத்தைத் தர, தாய் மனையாள், குழந்தைகள், வெறுப்புக் கொள்ளும்
நல்ல சுற்றத்தார் முதலிய அனைவரும் பழிக்கும்படியான சொற்களைச்
சொல்வதால் - பேசி- நிரம்ப நாள் தோறும் பரிகசித்துச் சிரிக்க

என் அடக்கி வெற்றி கொள்ளும் பாசக்கயிறு கொண்டு கோபத்துடனே
வந்து எதிர்த்துச் சூலத்தைக் கையில் எடுத்து அதை என் மேல் எறிந்து,
நெருப்பை வாய் கக்க, நான் பயம் கொள்ளும் படியே

இழுக்க வருகிடும் எம தூதர்களானவர் என்னை பிடிப்பதற்கு முன்பாக
உன்னுடைய தாள் தாமரையாகிய இரு திருவடிகளையும் அடியேனுக்குத்
தரும் பொருட்டு மயில் மேல் வந்தருள வேண்டும்.

பொருள் செறிந்த செந்தமிழால் உன்னையே தினந்தோறும் நினைக்கவும்
உன்னுடைய நிறைந்த திருவருளைத் தந்தருள்வாய், என்னுடைய அருமை
உயிர்க்குத் துணையாக என் கருத்திலேயே பொருந்தி நின்றிருந்து அருளவும் வேண்டும்

கடல் நீரிலே ஒளிந்திருந்த சூரனுடைய உடலைப் பிளவு செய்ய
அது இரண்டு கூறாகத் தோன்றி எழுந்து ஒப்பற்ற சேவலும் அழகிய மயிலும்
ஆகும்படி செலுத்திய வேலாயுதத்தை உடையவனே!

அன்னவாகனம் ஏறும் பிரமனும், செந்தாமரைக் கோயிலின் மீது
வீற்றிருக்கும் இலக்குமி சேர்ந்துள்ள திருமாலும், ஆக இருவரும்
அடி (முடி) தேடிய சிவபெருமானுக்கு அரிய (பிரணவப்) பொருளை
விளக்கி உபதேசித்த குமரேசனே!

அறத்தையும் தருவோர் கண யுகரர்
நினைத்தினம் தொழுவார் அமராய்புரி
அருட் செறிந்து அவிநாசியுள் மேவிய பெருமானே.

ஆய்க்குடி 206

206 சாருகேசி (2½) ல (1+½)

வாட்பட சேனைபட ஓடடி ஒட்டாரை, கிறு
மாப்புடைத தாள் அரசர் பெருவாழ்வும்
மாத்திரைப் போதில் இருகாட்டினிற போமென, இல்
வாழ்க்கை விட்டு ஏறும் அடி யவர் போல
கோட்படப் பாதமலர் பார்த்து இளைப்பாற வினை
கோத்த மெய்க் கோலமுடன் வெகுபேத்

கோப்பு உடைத்தாகி அலமாப்பினில் பாரி வரு
கூத்தின் இப்புரையிட அமையாதோ

தாளபடக கோப விழிப் பாம்பினிற் பாவனமிசை
சாய்த் தொடுப் பாரவு நின கழல் தாவி

சாற்றும் அககோர உரு கூறு (2)தைதத்தார் மவுலி
தாழகக வஜ்ராயுதனும இமையோரும

அற நெறியை உபதேசிப்பவரும், பெருமை பொருந்திய அந்த ணர்களும் உன்னை நாள் தோறும் தொழுபவர்களைய், அமர்ந் -திருத்தலை விரும்பியுள்ள, அவிநாசியுள் மேவிய பெருமானே! அருட்செறிந்து (அடியார்களுக்கு அருள் நிறையப் பாலித்து) அவிநாசி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே.

ஆய்க்குடி 206

வாளை வீச்சு படுவதால் சேனைகள் அழியும்படி, (பட்டாளை) பகை வர்களை தட்டி, இறுமாப்புக் கொண்ட (தாள்) முயற்சியை உடைய அரசர்களின் பெரிய வாழ்வும்
ஒரு நொடிப் பொழுதில், சுடு காட்டில் அழிந்து போகும் என (உணர்ந்து) இல்லற வாழ்க்கையை (விட்டு) துறந்து கரை ஏறும் அடியார்களைப் போல ஒரு கோட்பாட்டை - துணிவான முடிவை - மேற்கொள்ளவும், உனது திருவடி மலரைக் கண்டு களிப்புறவும், வினையினால் ஏற்படுகின்ற தேகம் என்னும் கோலத்துடன், பல உருவங்களாம்
அமைப்பு - அலங்காரங்களைப் பெற்று, துன்பங்களில் பாரித்து வரும் - வளர்ந்து வரும் ஆட்டத்தில் இனியேனும் இந்தப் (பூறை) பயனற்றவனை, நீ இடுதல் - தள்ளுதல் போதாதோ - ஒரு முடிவு பெறாதோ!

கால் பட்டால் கோபித்துச் சீறும் விஷப் பாம்பு போல, பாலனை மார்க்கண்டேயன் மீது (சாய - தொடுப்பு) குறிக்கொண்டு தொடாதல் மிக்க வுடன் - குறித்துப் பிடிக்கத் தொடர்ந்தவுடன், (தமது) நீண்ட திருவடியை நீட்டி - (உன்னை விடேன் பார் என்று) பேசின அந்தக கோரரூப யமனை உதைத்த பரம சிவன் தமது முடியைத் தாழ்க்கவும், குலிசாயுதனும் இந்திரனும் தேவர்களும்

ஆட்படச் சாம பரமேட்டியைக் காவலிரு
ஆய்க்குடிக் காவல — உததி மீதே
ஆர்க்கும் அந்தரனவரை வேற் கரத்தால் வரையை
ஆர்ப்பு எழச் சாட வல — பெருமானே

இராமேசுரம் 207

(207) ஆனந்த பைரவி (35) (—) 1½1½1½0 - கண்ட நடை

வால வயதாகி அழகாகி மதன் ஆகி, பணி)
வாணிப மொடு ஆடி, மருள் ஆடி விளையாடி, விழல்
வாழ்வு சதமாகி, வலுவாகி, மட கூட மொடு — பொருள் தேடி

வாசு-பூகேடு மலரோடு மணமாகி மகிழ்
வாசனைகளாதி இடலாகி, மயலாகி, . விலை
மாதர்களை மேவி அவராசை தனிலே சுழல — சிலநாள் போய்

தோல திரைகளாகி, நரையாகி, குருடாகி, இரு
காலகள் தடுமாறி, செவிமாறி, . பசு பாச பதி)
சூழ கதிகள மாறி சுகம மாறி தடியோடு — திரி பொருடநாளில்

சூலை சொறி ஈளை வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலை சுரமோடு பிணி) தூறு இருமல்
சூழ ஆற மூல சுக மாலமென நாறி உடல் — அழிவேனோ

ஆட்பட்டு நிற்கவும், (சாமம்) பொன்னிறமுடைய பிரமனைச் சிறை (5)
யிலிட்ட ஆய்க்குடி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அரசே / கடலிலே
போர் புரிந்த அந்த சூரனதி அசுரர்களையும், திருக்கரத்து வேலாயுதத்
தால் எழு கிரியையும், பேரொலி உண்டாகும்படி அழிக்க வல்ல பெருமானே

இராமேசுரம் 207

வாலிப வயதை அடைந்து, அழகு நிரம்பப் பெற்று, மன்மதன் போல விளங்கி வாணிபம் பணியொடு ஆதி) ஊதியம்/லாபம் தர வல்ல பல தொழில்களை மேற்கொண்டு நடத்தி, மயக்க அறிவைப் பெற்று, (வீணை கலவி) விளையாடல்களிற் காலம் போக்கி, பயனற்ற வாழ்க்கையையே (சதம்) நித்திய மெனக் கொண்டு, அத்தகைய வாழ்க்கையிலேயே மன உறுதி பெற்று; மாட கூடங்களுடன் செல்வத்தைத் தேடிச் சேகரித்து

நறுமணம் உள்ள புனுகு (ஏடு மலர்) இதழ்களோடு கூடிய மலர் இவைகளினத்தைச் செலுத்தியவனாய், மகிழ்ச்சியுடன் வாசனைப் பொருள்கள் முதலியவற்றை அணிந்தவனாய், காமப் பற்றைக் கொண்டு, பொது மகளிரை விரும்பி அவர்கள் மீது கொண்ட ஆசையிலே சுழல, அங்ஙனம் சில நாள் போக

உடலின் தோல் சுருங்கலுற்று, மயிர் நரைத்தும், கண்கள் ஒளி மழுங்கியும் இரண்டு கால்களும் தடுமாற்றம் அடைந்து, காதுகள் செவிடுபடவும், பசு ஞானம் பாச ஞானம், பதி ஞானம் என ஏற்பட்டிருந்த அறிவு வழிகள் யாவும் மறைத லுற்று, சுகம் கெட்டு, தடி கொண்டு நடந்து திரியும் நாள்களில்

தல், சொறி ஈளை, வாதம், நீரிழிவு, சோகை, காமாலை, சுரம் இவைகளோடு கிளைத்தெழுகின்ற இருமல் இவையெலாம் சூழ்ந்து பற்ற மூலகாரணமாம் அபாத மெனும்படியான (உடல் நாறி) உடல் துர்நாற்றம் அடைந்து அழியக் கடவேனோ?

நாலு முகன் ஆதி அரி தம் என அதாரம் உரை
யாத பிரமாவை விழ மோதி பொருள் ஓதுக என
நாலு சிரமோடு சிகை தாளிபட தாளமிடும் இளையோனே

நாறு இதழி வேணி சிவரூப கலியாணி முதல
ஈண மகவு ஆன மகிழ் தோழ, வன் மீது செறி
ஞான குற மாதை தினை காவில் மணமேவு புகழ் மயில் வீர ·

ஓலமிகு தாடகை சுவாகு வளர் ஏழு மரம்
வாலி யொடு நீலி பகீரடு உரு விராதன எழும
ஊத கடலோடு விறல் ராவண குழாம் அமரில் பொடியாக

ஓகை தழல் வாளி விடு முரி, தநு, நேமி, வளை
பாணி திருமார்பன் அரி கேசன் மருகா எனவே
ஓத மறை ராமேசுர மேவு குமரா அமரர் பெருமானே.

<u>உத்தரமேரூர்</u> 208

(208) <u>காபி</u> $(5\frac{1}{2})$ — $(1\frac{1}{2}+\frac{1}{2}+1+1\frac{1}{2})$

சுருதி மறைகள, இரு நாலு திசையில் அதிபர், முநிவோர்கள்,
துகள இல் இருடி எழுபேர்கள் சுடர மூவர்
:

நான்கு முகங்களை உடையவனும் 'ஆதி அரிஓம்' என்பதற்கு ஆதாரமான பொருளைச் சொல்லத் தெரியாதவனும் ஆகிய பிரமனை விழும்படி தாக்கி) (சரியான) பொருளைச் சொல்லுக என்று அவனது நான்கு தலைகளும் குட்டுகளும் சிதறுண்டு அலையத் தாளமிடுவது போலக் குட்டின இளையோனே!

மணம் வீசும் கொன்றை மாலை தரித்த கூந்தலை உடையவரும் மங்கல வடிவுடைய நித்ய கல்யாணியும் ஆகிய உமாதேவியார் முதலில் பெற்றருளிய பிள்ளையாகிய விநாயகர் மகிழ்கின்ற தோழரே! கானகத்தில் பொருந்தி வாழ்கின்ற, ஞானசொரூபியாகிய வள்ளிபிராட்டியை தினைப்புனச் சோலையில் மணம் புரிந்த புகழ் வாய்ந்த மயில் வீரனே!

கூச்சலிட்டு வந்த தாடகை, சுவாகு, வளர்ந்திருந்த மராமரங்கள் ஏழு, வாலி, நீலி, பகன், நப்பற்ற விராதன், எழுந்து அலைகள் வீசும் கடல், வலிமை மிக்க ராவணன் - அவனைச் சேர்ந்த அரக்கர் கூட்டங்கள் யாவரும் போரில் பொடிபட்டழிய

களிப்புடன் நெருப்பை வீசும் அம்பைச் செலுத்தின (கையை உடையவன்) வலிமை வாய்ந்த வில், சக்கரம், சங்கு, இவைகளை ஏந்திய கையை உடையவன், இலக்குமி வாசம் செய்யும் திருமார்பை உடையவன் அரி, கேசவன் ஆகிய திருமாலின் மருகனே! என்று மறைகள் ஓதிப் புகழும் ராமேசுரத்தில் வீற்றிருக்கும் தேவர்கள் பெருமானே.

<u>உத்தரமேரூர்</u> 208

உபநிடதங்கள், வேதங்கள், எட்டுத் திக்குப் பாலகர்கள், முனிவர்கள், குற்றம் இல்லாத ரிஷிகள் ஏழுபேர், சூரியன், சந்திரன், அக்கினி எனப்படும் மூன்று சுடர்கள்

சொல இல் முடிவில் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தொலவில் உருவின் உலகோர்கள் மறையோர்கள்

அரிய சமயம் அறு கோடி, அமரர் சரணர் சத கோடி
அரியும் அயனும் ஒரு கோடி இவர் கூடி
அறிய அறிய அறியாத, அடிகள அறிய, அடியேனும்
அறிவு(உ)ள் அறியும் அறிவு ஊற அருள்வாயே

வரைகள் தவிடு பொடியாக, நிருதர் பதியும் அழிவு ஆக,
மகர சலதி அளறுக, முது சூரும்
மடிய, அலகை நடமாட, விஜய வனிதை மகிழ்வாக
மவுலி சிதறி, இரைதேடி வரு நாயகள்
நரிகள் கொடிகள் பசி ஆற, உதிர நதி அல மோத
நமனும் வெருவி அடி பேண மயில் ஏறி
நளின உபய கரவேல. முடுகு முருக, வட மேரு
நகரி உறையும் இமையோர்கள பெருமானே-

---

(209) ஸிந்து பைரவி (12) 209 (–) ஆதி-திஸ்ர நடை

தோல், எலும்பு, சீ, நரம்பு, பீளை, துன்று கோழை, பொங்கு
சோரி, பிண்டமாய உருண்டு வடிவான

இத்தனைமையதென்று சொல்லுதற்கு இல்லாத, வரும யுக முடிவில் (7)
முடியாதவரும், ஆகிய (பகுதி புருடா) பிரகிருதி புருடர் - பிரபஞ்ச மாமா
அதிகாரிகள், நவநாதர்கள், தூரத்தில உள்ள நக்ஷத்திர உலகில்
உள்ளவர்கள், வேதம வல்லவர்கள்

அருமையான சமயங்கள் கோடிக்கணக்கானவை, தேவர்கள், அடியார்
கள் நூற்றுக்கோடி பேர், திருமால் பிரமா ஒருகோடி பேர், இவர்களெல்லாம் கூடி
அறிந்து பார்க்க. அறிந்து பார்க்க. அறிய முடியாத, (உனது) திருவடிகளை
அறிய அடியேனும், எனது அறிவுக்கு உள்ளேயே அறிய வல்லதான அறிவு
உறும்படி அருள்புரிவாயே!

கிரௌஞ்சம் ஆகிய மலைகள் தவிடு பொடியாக, அசுரர்கள் ஊர்கள் அழிய,
மகர மீன்கள் உள்ள கடல்கள் சேருக, பழைய சூரனும்
அழிவுற, பேய்கள் நடனமிட, விஜயலக்ஷ்மி மகிழ்ச்சி கொள்ள, அவுணர்க
ளுடைய தலைகள் சிதறி விழ, உணவு தேடி வந்த நாய்களும
நரிகளும் காக்கைகளும் பசி நீங்க, ரத்த ஆறு அலை மோதி ஓட, யமனும்
அச்சமுற்று உனது திருவடியைத் துதிக்க, மயிலில் ஏறி
தாமரை போன்ற (உபயம்) மகிமை வாய்ந்த திருக்கரத்து வேலாயுதத்தை
விரைவிற செலுத்தின முருகனே! உத்தரமேரு எனும் தலத்தில்
வாழும் இமையவர்கள் பெருமானே!

209

(209)

தோல், எலும்பு. சீழ். நரம்பு. பீளை, நெருங்கியிருக்கும் கோழை.
மேலெழும ரத்தம் - இவை ஒரு பிண்டமாய் உருண்டு, ஒரு வடிவு ஏற்பட்டு

தூல பங்க காயம் வம்பிலே சுமந்து நான் மெலிந்து
சோரும் இந்த நோய் அகன்று துயர் அற

ஆலம் உண்ட கோன், அகண்ட லோகம் உண்ட மால், விரிஞ்சன
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ் தாளும்

ஆனனங்கள் மூவிரண்டும் ஆறிரண்டு தோளும், அம்மை
ஆடல் வென்றி வேலும் என்றும் நினைவேனே

வால சந்த்ர சூடி, சுந்த வேத மந்த்ர ரூபி, அம்பை,
வாணி, பகச பாணி தந்த முருகோனே

மாயை ஐந்து, வேகம் ஐந்து பூதம் ஐந்து, நாதம் ஐந்து
வாழும் பெரும் சராசரங்கள் உறைவோனே

வேல அன்பு கூர வந்த ஏக தந்த யானை கண்டு
வேடர் மங்கை ஓடி அஞ்ச அணைவோனே

வீர மங்கை, வாரி மங்கை, பாரின் மங்கை, மேவுகின்ற
மேரு மங்கை ஆள வந்த பெருமானே.

கனுக்கு புலனாய, பாவத்துக்கு இடமான உடலை. வினைச்
சுழந்து, நான் மெலிந்து தளருகின்ற இந்தப் பிறவி நோய் விலகி
என் துயரம் முடிவு பெற

ஆலகால விஷத்தை உண்ட தலைவன் (சிவன்), விரிந்த லோகங்களை
உண்ட திருமால், பிரமன், வேதங்கள், ஆகமங்கள் - இவை யெல்லாம் -
புகழ்கின்ற உனது திருவடிகளையும்

திருமுகங்கள் ஆறினையும், பன்னிரு புயங்களையும், அழகிய திருக்கரத்
தில் உள்ள, போரில் வெற்றி கொள்ளும் வேலாயுதத்தையும்,
எப்போதும் (மறவாமல்) நினைக்க மாட்டேனோ!

இளம் பிறையைச் சூடியுள்ளவரும், சந்த சுரங்களுடன் கூடிய வேத
மந்திரத்தின் வடிவினையுடையவரும், அம்பிகையும், கலைமகளை ஒரு கூறு
உடையவரும், ஐந்து மலர்ப்பாணங்களைப் படையாகக் கொண்டவரு
ஆகிய உமாதேவியார் தந்தருளிய முருகோனே

ஐந்து மாயை, ஐந்து வேகம், ஐந்து பூதம், ஐந்து நாதம், வாழ்கின்ற
பெரிய (சராசரங்கள்) அசையும் பொருள்கள், அசையாப் பொருள்கள்
இவைகள் எல்லாவற்றிலும் உறைபவனே!

வேலை - வேண்டிய வேளையில் / சமயத்தில் - அன்பு மிக்கு வந்த, ஒற்றை
கொம்புடைய விநாயகமூர்த்தியாகிய யானையைக் கண்டு, வேடர்
மங்கையாகிய வள்ளிபிராட்டி அஞ்சி ஓடி அபயம் புக அவளை அணைப்பவனே!

வீர லக்ஷ்மி, பாற்கடலில் தோன்றிய லக்ஷ்மி, (பாரின) பூதேவி
இவர்கள் விளங்கும் மேருமங்கை எனப்படும் உத்தரமேரூரில்
ஆட்சி புரியும் பெருமானே!

எட்டிகுடி 210

(210) ஆரபி (10½) (v) (½+2+2+2+3)

ஓங்கும் ஐம்புலன் ஓட நினைத்து இன்பு அயர்வேனை

ஓம் பெறும் ப்ரணவாதி உரைத்து எந்தன் ஆள்வாய்

வாங்கி வெங்கணை சூர் குலக் கொம்பு கடாவி

வாங்கி நின்றன ஏழில் உகைக்கும் குமரேசா

மூங்கில் அம்புய வாச மணக்க குஞ்சரி மானும்

மூண்ட பைங்குற மாது மணக்கும் திருமார்பா

காங்கை அங்கு அறு பாசு இல் மனத்து அன்பர்கள் வாழ்வே

காக்கிரங்குடி ஆறுமுகத்து எம் பெருமானே.

எண்கண் 211

(211) ரஞ்சனி (12) ஆதி-திஸ்ர நடை

சந்தனம திமிர்ந்தணைந்து குங்குமம் . கடம்பு இலங்கு

சண்பகம் செறிந்து இலங்கு திரள் தோளும

எட்டிகுடி 210

பெருகி வரும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் - என்னும்) ஐந்து
புலன்களும் என்னை இழுத்துக் கொண்டு ஓட - அவ்வழியே நான் ஓட-நினைத்து
இன்பம் கொண்டு தளர்ச்சி கொள்பவனாகிய எனக்கு
"ஓம்" என்னும் பிரணவப் பொருள் ஆதிய மந்திரங்களை உபதேசித்து
அடியேனை ஆண்டருள்வாய்.
(வாங்கி) வில்லை வளைத்து, கொடிய அம்புகளைச் சூரர்களின்
சிறந்த கூட்டங்களின் மீது (கடாவி) செலுத்தி
(வாங்கி நின்றன) வளைந்து நின்ற (சேனை) மீது [ஏ - மிகுதி-பெருக்கம்]
நிரம்பப் பிரயோகிக்கும் குமரேசனே/ [அல்லது] ஏவில் உதைக்கும் -
அம்பு கொண்டு செலுத்தின குமரேசனே/
மூங்கில் போன்ற அழகிய புயங்களை உடைய, நறுமணமுள்ள
யானை மகள் தேவசேனையையும்
பக்தி முண்டருந்த அழகிய குறமாது வள்ளியையும் மணந்த திருமார்பனே.
(காங்கை) வெப்பம் - மனக் கொதிப்பு - அங்கு (அற்ற) இல்லாத, பாசங்கள்
ஆசைகள் இல்லாத மனத்தராகிய அன்பர்களின் செல்வமே/
எட்டிகுடி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் எமது ஆறுமுகப் பெருமானே

எண்கண் 211

(வி)

- சந்தனத்தை நிரம்பப் பூசிச் சேர்த்து, குங்குமம், கடம்பு, விளங்கும்
சண்பகம், இவை நெருங்கி விளங்கும் திரண்ட தோள்கள் விளங்க

தண்டை அம் சிலம்பு அலம்ப, வெண்டையம் சலம்சல் என்று
சஞ்சு இதம் சதங்கை கொஞ்ச மயில் ஏறி

திந்திமிந்திமிந்தி மிந்தி தந்தனந் தனநதன் என்று
சென்றசைந்து உகந்து வந்து க்ருபையோடே
சிந்தை அம் குலம் புகுந்து சந்ததம் புகழ்ந்து உணர்ந்து
செம்பதம் பணிந்து இரு என்று மொழிவாயே
அந்த மந்தி கொணடு இலங்கை வெந்து அழிந்து, இம்ப கண்டன்
அங்கமும் குலைந்து அரங்க கொள் பொடியாக

அம்ப கும்பனும் கலங்க வெஞ்சினம் புரிந்து நின்று
அம்பு கொண்டு வென்ற கொண்டல் மருகோனே

இந்துவும் கரந்தை தும்பை கொன்றையும் சலம் புனைந்திடும்
பரன் தன அணயில் வந்த குமரேசா

இந்திரன் பதம் பெற (அ)ண்டர் தம் பயம் கடிந்த பின்பு
எண்கண அங்கு அமர்ந்திருந்த.. பெருமாளே.

எழுகரை நாடு 212

(212) மலையம (ஓ) (—) ஆதி

விரகு அற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்
விழி புனல் தேக்கிட அன்பு மேன் மேல்

தண்டையும அழகிய சிலம்பும் ஒலி செய்ய, வெண்டையம் (வீரக் (10)
காலணி) சலன் சல் என்று ஒலிக்க (சஞ்சாயல்) உருவம் இனிதாக
அமைந்துள்ள சதங்கை கொஞ்சுவது போல் ஒலிக்க, மயில் மீது ஏறி
திநதி மிநதி திநதி மிந்தி, தந தனந் தனந் தன் என்று, மெலல அசைந்து
உகந்து வந்து குருவையுடனே
(என) மணமாகிய அழகிய கோயிலிற் புகுந்து, 'எப்போதும் புகழ்ந்து
அறிந்து, செவ்விய பதங்களை பணிந்து இருப்பாயாக' என்று மொழிந்தரு
ளுக
பேர்போன அந்தக் குரங்கு அநுமானைக் கொண்டு, இலங்கை
வெந்து அழியவும், (கிடும்ப) கொடுஞ்செயலக் கொண்ட (கண்டன்) வீர
னும் ராவணனுடைய உடலம் அழிபட்டு, அரத்திறல் ராவினது போய்ப்பொடியாக
அம்பு முதலிய பாணங்களைக் கொண்டிருந்த கும்பகர்ணனும் உள்ளம்
கலங்கக், கொடுங்கோபத்துடன் நின்று அம்பை ஏவி வெற்றி கொண்ட
மேக வர்ணனும் திருமாலின் மருகனே!
பிறை, திருநீறுப் பச்சை, தும்பை, கொன்றை, கங்கை இவை தமை
அணியும் சிவபிரானுடைய (தேவர்கள் பால வைதத) அன்பால் தோன்றின
குமரேசனே!
தேவேந்திரன் தன் பதத்தைப் பெறுமாறு தேவர்களுடைய பயத்தைத்
தவிர்த்த பின்னர், எண்கண் என்னும் தலத்தில் அமர்ந்திருந்த பெருமானே

எழுகரைநாடு 212

தந்திரம (வஞ்சனை) இன்றி உண்மை நிலையுடன் உன்னைக் கருதியும்,
(உன்னை நினைநது) உருகியும், (உன திருநாமங்களைக் கூறி உன்னை) வாழ்த
தியும், கண்களில் நீர் நிறைநது வழிய, அன்பு மேலும மேலும்

மிகவும் - இராப்பகல் பிறிது பராக்கற
விழைவு கூராய் புனையும் குமார
முருக, ஷடாக்ஷர, சரவண, கார்த்திகை
முலைதுகர் பார்த்திப என்று பாடி
மொழி குழறித் தொழுது அழுது அழுது ஆட்பட
முழுதும் அல்லாப் பொருள் தந்திடாயோ

பரகதி காட்டிய விரக, சிலோச்சய
பரம. பராக்ரம, சம்பராரி
பட, விழியால் பொரு, பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி தந்த வாழ்வே
இரை கடல் தீப்பட, நிசிசரர் கூப்பிட,
எழுகிரி ஆர்ப்பு எழ வென்ற வேலா
இமையவர் நாட்டினில், நிறை குடி ஏற்றிய
எழுகரை நாட்டவர் தம்பிரானே.

<u>கந்தனார்</u> 213

(213) <u>பூர்வி கல்யாணி</u> (2½) (ட) <u>(1½+H)</u>
விந்து பேதித்த வடிவங்காய் ஏதிசையும்
மின சராசரக் குலமும். வந்து(2) லாவி

பெருகவும். இரவும பகலும் உன்னை நினைக்கும் நினைவு தவிர வேறு சிந்தனைகள் அறறு ஒழிய (உன) விருப்புக்குரிய குராமலரை அணியும் குமரனே முருகனே! ஷடாக்ஷரனே! சரவண பவனே! கார்த்திகை மாதர்களின முலைப்பாலை பருகின அரசே! என்றெல்லாம் பாடி

மொழிகளை கூறுமபடி உன்னைத் துதி செய்து வணங்கி, அழுது அழுது- ஓயாமல அழுது- உனக்கு ஆட்படுமாறு, எதுவும் அல்லாததான பொருளை- உலகப் பொருள் யாவற்றையும் கடந்த ஞானப் பொருளை- இது என்று சுட்டிக் காட்ட இயலாத அந்தப் பொருளை- அடியேனுக்குத் தந்தருளமாட்டாயோ!

மேலான மோக்ஷ வீட்டைக் காட்டின (விரக) சாமர்த்திய சாலியே! (திலோச்சனம்) மலையரசே! மகா பராக்ரமசாலியே! (சம்பராரி) மன்மதன் அழிய. (நெற்றிக) கண்ணால் அவனை எரித்தழித்த சிவபெருமான், போற்றித் துதித்த பகவதியாம் பார்வதி பெற்ற செல்வமே!

ஒலிகின்ற கடல் எரிபடவும், இரவிலே சஞ்சரிக்கின்ற அசுரர்கள் அலறிக கூச்சலிடவும, ஏழு குலமலைகள் பேரொலியிட்டுக கூசசலிடவும் வென்ற வேலனே தேவர்களின உலகில், தேவர்கள் யாவரையும் நிறைந்து வாழக் குடியேற்றிய ஏருகரை நாடு என்னும் தலததவர் தம் தம்பிரானே.

கந்தனூர் 213

(விநது) சகதிலும் வெவவேறான உருவங்களாய் எல்லாத் திசைகளிலும் ஒளி பெறும சராசரக் குலமும் (சரம- அசையும பொருள், அசரம்- அசையாப் பொருள்) எனனும கூட்டமாய (இவ்வுலகில்) வந்து காலம் கழித்து

விணை போய் விட்ட உடல், திருதை தான் உற்று அறியும்
மிஞ்ச நீ விட்ட வடி வங்களாலே

வந்து நாயிற் கடையன் நொந்து ஞானப் பதவி
வந்து தர இக்கணமே என்று கூற
மைந்தர் தாவிய புகழ தந்தை தாய் உற்று (உ)ருகி
வந்து சேயைத் தழுவல் சிந்தியாதோ

அநதகாரத்தில் இடி எனப வாய் விட்டு வரும
அங்கி பாரவைப் பறையர் மங்கிமான
அங்கை வேல விட்டு அருளி இந்தரலோகத்தின் மகிழ்
அண்டார் ஏறக் கிருபை கொண்ட பாலா
எந்தன் ஆவிககு (உ)தவு சுந்தர சேர்வைச் சடையச்
எந்தை பாகத்து (உ)றையும் அந்த மாது

எங்குமாய் நிறகும் 3ரு கந்தனூர சத்தி புகழ
எந்தை பூசித்து மகிழ தம்பிரானே.

பின்பு பிரிந்து அழிந்து போய், உடலை விடுவதை, என் மனது
ஆய்ந்து அறியும்; (இங்ஙனம்) நிரம்ப நீ எனக்கு அளிக்கும்
வடிவங்களில - பிறப்புகளில்
நான் வந்து, நாயினுங் கீழ்ப்பட்டவனாய், மனம் நொந்து, தான நிலையை
இந்த க்ஷணமே வந்து கொடு என்று உன்னிடம் முறையிடும் போது
குழந்தைகள் (பெற்றோர்களிடம்) தாவி நின்று புகழ்ந்தால், தந்தை
யும் தாயும் (அம்மொழிகளைக் கேட்டு) மனம் உருகி வந்து அக்குழந்தை
களைத் தழுவிக்கொள்வதை உன் உள்ளம் சிந்தியாதோ! (நீ எனக்குத்
தந்தை தாய் அல்லவோ - என் முறையீட்டைக் கேட்டு என்னை ஆதரிக்
கக் கூடாதா என்றபடி)
பேரிருளில் இடி இடிப்பது போல, கூச்சலிட்டு வருகின்ற, தீப்போன்ற
கண்களை உடைய கிழிகுலத்தராம் அசுரர்கள் நடுங்கி மாண்டு போக
அழகிய திருக்கை வேலை செலுத்தி அருளி, இந்திர லோகத்தில்
மகிழ்ச்சியுடன் தேவர்கள் குடியேற அருள் புரிந்த குமரனே!
எனது ஆவிக்கு உதவி புரிந்தவரும், சந்திரனைச் சேர்த்து வைத்துள்ள
சடையரும், எந்தையும் ஆன சிவபெருமானும், அவரது (இடத்து)
அமர்ந்துள்ள அந்தப் பார்வதி தேவியும் - ஆக இருவரும் -
எங்கும் நிறைந்து வீற்றிருக்கும் ஒப்பற கந்தனூரில், தேவி
புகழும் எந்தை சிவபெருமான் பூசித்து மகிழ்ந்த தம்பிரானே!

கந்தன் குடி 214

ஒப்பு ஸஹானா (3) ப 13

எந்தன் சடலங்கம் பல பங்கம்பட நொந்தங்கள
என்றும் துயர் பொன்றும்படி அருநாளே
இன்பம் தரு செம்பொன் கழல் உந்தும் கழல் தந்தும் வினை
என்றும்படி பந்தம் கெட மயில் ஏறி
வந்தும் பிரசண்டம் பகிரண்டம் புவியெங்கும் திசை
மண்டும்படி நின்றும் சுடர் ஒளி போலும்

வஞ்சங்குடி கொண்டும் திரி நெஞ்சந்துகள் என்றுங் கொளும்
வண்டன் தமியன் றன பவம் ஒழியாதோ
தந்தந்தன திந்திந்திமி யென்றும் பல சஞ்சம் கொடு
தஞ்சம் புரி கொஞ்சுஞ் சிறு மணி ஆரம்

சந்தம் தொனி கண்டும், புயல் அங்கன், சிவனுமயன். பதி
சம்புந் தொழ நின்றும் தினம் விளையாடும்

கந்தன், குகன, என்றன்குரு, என்றும் தொழும் அன்பன் கவி
கண்டு, (உ)கந்திட அன்று அனபொடு - வருவோனே

கண்டின் கனி சிந்தும் சுவை பொங்கும் புனல் தங்கும் சுனை
கந்தன்குடியின தங்கிய பெருமானே

கந்தன்குடி 214

என்னுடைய (சடலமாகிய அங்கம்) உடலாகிய உறுப்பு பல வகைத்தான (பங்கம்) இடர்களிற்படும் (தொந்தங்கள்) தொடர்புகள், எக்காலத்தும் உள்ள துயர நிலை இவை ஒழியும்படியான ஒரு நாள் உண்டா!

இன்பத்தைத் தரும் (உனது) செம்பொன்னாலாகிய கழல் பொருந்திய திருவடிகளைத் தந்து பின்பு எப்போதும் போல, பாசபந்தங்கள் அறிய, மயிலில் ஏறி வந்து, வீரத்துடன், வெளியிலே உள்ள அண்டங்கள், பூமி எங்கும், திசைகளெல்லாம் நிறையும்படி பெருஞ்சோதி போல் நின்று (தரிசனம் தந்து) நின்று- அவ்வாறு நீ நிற்பதால்-

வஞ்சகமே குடி கொண்டு திரிகின்ற நெஞ்சினனும் குற்றமே என்றும் செய்கின்ற தீயோனுமான தனியனேனுடைய (பவம்) பிறப்பு நீங்காதோ

தந்தந்தன திந் திந் திமி என்றும், சந் சக என்னும் பல ஒலியுடனேயும், (அடியார்களுக்கு) அடைக்கலம்- புகல் அளிக்கின்றேன என்று சொல்வது போலக் கொஞ்சி ஒலிக்கும் சிறு மணி மாலைகளின்

சதத ஒலியைக் கண்டும், மேகநிற உடல் உடைய திருமால், சிவன் எனும் பெரியோன், (படைப்பு) பதி- தவமுடைய (சம்பு) பிரமன் - மூவரும் தொழ விளங்கி நின்று, தினமும் (அடியார்கள்) உள்ளத்தில் விளையாடுகின்ற

கந்தனே! குகனே! என்றன குருவே! என்று தொழுத அன்பன் நக்கீரனுடைய பாடலைக் கேட்டு (அவர்) அடைபட்ட குகையினின்றும் பிழைத்து உய்யும்படி அன்று அன்புடன் (அவர் முன்) வந்தவனே!

கற்கண்டு போல இனிக்கும் பழங்கள் சிந்துவதால் சுவை மிக்க நீர் உள்ள சுனைகள் விளங்கும் கந்தன்குடி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே

(215) தீரவாணி (8) (—) ஆதி

தசையாகிய கற்றையினால் முடியத்
தலைகால் அளவு ஒப்பனையாயே
தடுமாறுதல் சற்றொரு நாள் உலகிற்
தவிரா, உடலத்தினை நாயேனை
பசு பாசமும் விட்டு அறிவால் அறியப்படு
பூரண நிஷ் களமான
பதி பாவனையுற்று அநுபூதியில் அப்
படியே அடைவித்து அருள்வாயே

அசலேசுரர் புத்திரனே குணதிக(கு)
அருணைநய முத் தமிழோனே

அகில ஆகம வித்தகனே துகள் அற
றவர் வாழ் வடைவித் திருநாடா
கசிவார் இதயத்து அமிர்தே மதுபக்
கமலாலயன் மைத் துனவேளே

கருணாகர சற்குருவே குடகிற்
கருவூர் அழகப் பெருமாளே

கருவூர் 215

(215)

மாமிசமாகிய திரளால் முழுமையும் - தலை முதல் கால் அளவும்,
அலங்காரமாகவே (அமையப் பெற்று)
நீடுமாற்றம் (சஞ்சலம்) அடைதல், கொச்சமேனும் ஒரு நாள் கூட இந்த உலகத்
தில் நீங்காத - என்றும் சஞ்சலத்துக்கே இடமான - உடம்பை உடைய அடியேன்
(பசு) தற்போதத்தையும் - அகங்காரத்தையும், பாச பந்தங்களையும் விட்டு
ஞானத்தால் அறியப்படுகின்ற பூரணமானதும், உருவமில்லாததுமான
(பதி பாவனை) பரம் பொருளாம் கடவுள் தியானத்தை மேற்கொண்டு
அனுபவித்து (அநுபூதியில்) அந்த அனுபவ ஞானத்தில் (அப்படியே) மறுபடி
மீளா வண்ணம் (என் சிந்தனை மாறு வண்ணம் - அந்தத் தியான நிலையிலேயே)
என்னை ஒப்படைத்துச் சேர்ப்பித்து அருள்புரிவாயாக.

கயிலைமலைக் கடவுளாம் சிவனது (ஈ) அவை வீற்றிருக்கும் ரசனும் - தானும்
சிவனது புத்திரனே! கிழக்குத் திசையில் தோன்றும் உதய சூரியனது
ஒளிபோன்ற ஒளியை உடையவனே! முத்தமிழ்க் கடவுளே!
சகல ஆகமங்களிலும் வல்லவனே! குற்றமற்றவர்கள் வாழும் வயலூர்
என்னும் அழகிய ப்ரதேசத்தில் வீற்றிருப்பவனே!
உள்ளம் கசிபவர்களுடைய மனத்தில் ஊறுகின்ற அமிர்தமே! (மதுபம்)
வண்டுகள் மொய்க்கின்ற தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டுள்ள
பிரமனுக்கு மைத்துனமுறையில் உள்ள வேளே!
கருணாகரனே! சற்குருமூர்த்தியே! மேற்குத் திசையில் உள்ள
கருவூரில் வீற்றிருக்கும் அழகிய பெருமானே!

(216) கீரவாணி (16) 2/6 ஆதி- உகளா

நித்தப் பிணிகொடு மேவிய காயம் இது
அப்புப் பிருதிவி வாயுவு தேயுவு
நில்,பொற் ககனமொடாம் இவை பூத கலவைமேவி
நிற்கப்படும், உலகு ஆளவும் மாகர்
இடத்தைக் கொளவுமே நாடிடும் ஓடு
நெட்டுப் பணிகலை பூணிடு நான் எனும் மட ஆண்மை

எத்தித் திரியும் இதேது பொய்யாதென
உற்றுத் தெளி உணராது மெய்ஞானமொடு
இச்சைப் பட அறியாது பொய் மாயையில் உழல்வேனை
எத்திற கொடு,நின தாரடியாரொடும்
உய்த்திடு,உனதருளால் உயர் ஞான அமுது
இடுத்,திருவடியாம் உயர் வாழ்வுற இனிதாள்வாய்
தந்தத் தன தன தானன தானன
திந்தித் திமிதிமி தீதக தோதக
டந்தக் குட குகு தாகுட திகுட - என பேரிச்
சத்தத தொலி திசை தாவிட, வானவர்
திக்குக கெட,அரு சூரர்கள் தான்பட
சர்ப்பச்சத முடி நாணிட வேலதை எறிவோனே

நாள் தோறும் பிணியுடன் கூடிய தேகம் இது, இது நீர், மண், வாயு, அக்கினி
(இவ) உள்ளதான பொலிவுள்ள ஆகாயம் எனப்படும் ஐம்பூதங்களின்
சேர்க்கையால் உண்டாகி

நிற்கின்றதொன்றாகும். உலகமெல்லாம் ஆள வேண்டும், விண்ணவர்
இடத்தையும் (மேலுலகத்தையும்) கொள்ள வேண்டும் - என்னும் ஆசை
கொண்டு (நாடிடும்) அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளும்,
அதற்காக அங்கும் இங்கும் ஓடி அலையும்; (நெட்டு) செருக்குடன் ஆபர
ணங்களையும் ஆடைகளையும் அணிந்து கொள்ளும், 'நான்' என்கின்ற
முட்டாள்தனமான (அண்மை) அகங்காரத்துடன்

வந்திதுத் திரியும்; இந்நிலை ஏதும் சற்றும் பொய்யாகாது நிலைத்திருக்கும்
என்று திடமாக நினைத்துத் தெளிவான உண்மையை உணராமல், மெய்ஞ்
ஞானத்தை விரும்ப அறியாமல், பொய்யான மாயையில அலைச்சல் உறுகின்ற என்னை
தந்திரமாக ஆட்கொண்டு, உன்னுடைய அடியார்களுடன் என்னைக் கொண்டு
சேர்ப்பித்து, உன திருவருளால் சிறந்த ஞான அமுதத்தை அளித்து,
(உனது) திருவடியாகிய மேலான வாழ்வை நான் அடையும்படி இனிதே அருளுக.

தந்தத் தன தன தானன தானன திந்தித் திமி திமி தீதக தோதக
டந்தக் குட குகு தாகுட திகுட என்று ஒலிக்கும் பேரி (முரசின்)

(சத்த தொனி) பேரொலி திசைகளைக் கடந்து தாவிச் செல்ல, தேவர்கள்
வாழும் திசைகள் கலங்கிக் கெட, வந்து சூரர்கள் தானாகச (சர்ப்பம்)
ஆதிசேடனது நூறுக் கணக்கான பணமுடிகள் (நாணிட) அச்சம் கொள்ள
வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

வெற்றிப் பொடி அணி மேனியர், கோகுல
சுத்திக்கு கிடம் அருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழ காணியர் அருள்பாலா

வெற்புத் தடமுலையாள் வளி நாயகி
சித்தத்து அமர் குமரா, எமை ஆள் கொள
வெற்றிய புகழ் கரு ஊர் தனில் மேவிய பெருமானே.

(217) பூர்வி கல்யாணி (2½) (1+1½) 217
மதியால் வித்தகன் ஆகி
மனதால் உத்தமன் ஆகி
பதிவாகிச் சிவஞான
பர யோகத்(து) அருள்வாயே
நிதியே நித்தியமே, என
நினைவே நற்பொருளாயோய்
கதியே, சொற்பர வேளே
கரு ஊரிற் பெருமானே.

காதி 218

(218) சந்த்ர கௌன்ஸ் (3½) (1½+2)
தாரணிக்கு அதி பாவியாய் வெகு
சூது மெத்திய மூடனாய் மன
சாதனைக தளவாணியாய் உறும் அதி மோக

ஜெயத்தையே தரும் திருநீற்றை அணிந்த திருமேனியர், ஆயர் (16)
பாடியில் வளர்ந்த சக்தி (கிருஷ்ணனுக்கு-திருமாலுக்கு) தமது
இடது பாகத்தைத் தந்தருளிய ஆதிமாலைச் சடையர், மலை போன்ற
திரிபுரங்கள் சாம்பலாகும்படிக் கண்டவர் ஆகிய சிவபிரான் அருளிய
பாலனே
மலைபோன்ற கொங்கையளாம் வள்ளி நாயகியின் உள்ளத்தில்
வீற்றிருக்கும் குமரனே! எம்மை ஆட்கொள்ள வெற்றிப் புகழ்
விளங்கும் கருவூரில் வீற்றிருக்கும் பெருமானே.

217

என் புத்தி கொண்டு நான் ஒரு பேரறிவாளனாகி
என மனம் நன்னெறியையே பற்ற அதனால் நான ஒரு உத்தம புருஷனாகி
சிவ ஞானத்தில் என் மனம ஊறுவதாகி
மேலான யோக வழியை (நான் பற்றும்படி) அருள் புரிவாயாக
என் செல்வமே! அழிவிலாப் பொருளே! என்
என தியானப் பொருளே! சிறந்த பேரின்பப் பொருளானவனே!
என் புகலிடமே. எல்லோராலும் புகழப்படும் மேலான செவ்வேளே
கருவூர் தலத்துப் பெருமானே

காசி 218

(218)

இப்பூமியில் அதிக பாவியாய், மிக்க சூது நிறைந்த மூடனாய்,
மனத்தில் அழுந்திய திருடப்புத்தி உடையவனாய், பொருந்திய
மிக்க காம மயக்கில்

தாபம் மிக(கு) உள வினையுய்

பொரு வேல் விழிச்சியா ஆகும மாதர்கள்

- தாம் உயச் செயும் ஏது தேடிய நினைவாகிப்

பூரணசு சிவ ஞான காவியம் :

ஓதுதற புணர ஆன நேயர்கள்

பூசும் மெய்த் திருநீறு இடா இரு வினையேனைப்

பூசி, மெய்ப் பதம் ஆன சேவடி

காண வைத்து அருள் ஞானமாகிய

போதகத்தினை ஏயுமாறு அருள் புரிவாயே

வாரணத்தினையே கராவுமு

முனை வளைத்திடு போது மேவிய

மாயவற்கு இதமாக வீறிய மருகோனே

ஆர்மும் முப்புர வீறதானது

நீறு எழுப புகையாகவே செய்த

மா மதிப் பிறை வேணியார் அருள் புதல்வோனே

காரணக் குறியான, நீதியா

ஆனவர்க்கு முனைகவே, நெறி

காவியசு சிவநூலை ஓதிய கதிர்வேலா

கானகக் குற மாதை மேவிய

ஞான சொற் குமரா பராபர

காசியிற் பிரதாபமாய் உறை பெருமானே

ஆசை மிகுந்துள்ள பயனற்றவனாய், போருக்கு உரிய வேல்போன்ற கண்களை
உடையவரான (பொது) மாதர்கள், தாம் பிழைப்பதற்கு உதவி செய்யும் (ஏது)
செல்வதனைத் தேடித் தரும் நினைவைக் கொண்டு

பூரணமான சிவஞான நூல்களை. ஓதுதலில் (மனம் சேர்ந்துள்ள) விருப்பம்
கொண்டுள்ள அன்பர்கள் பூசுகின்ற உண்மைத் திருநீற்றை இடாத
இருவினையாளனை

திருநீற்றைப் பூச வைத்து, உண்மைப் பதவியான உனது திருவடிகளைக்
காணும்படி அருள் புரிந்து, திருவருள் மயமான ஞானம் என்கின்ற அறிவும்
(எனக்குக்) கிடைக்குமாறு அருள் புரிவாயாக

யானையை,(கஜேந்திரனை) முதலை முன்பு வளைத்து (இருந்த) போது, அங்கு
வந்து சேர்ந்து (உதவின) திருமாலுக்கு இன்பம் தரும் வழியில் (தருவதில்)
மேம்பட்டு விளங்கும் மருகோனே!

வாழ்ந்திருந்த முப்புரங்களின் பொலிவு (பெருமை) சாம்பலாகவும்,
புகையெழவும் செய்த, சிறந்த திங்கட் பிறையை அணிந்துள்ள சடைப்
பெருமான் அருளிய புதல்வனே!

(எவைக்கும்) மூல காரண இலக்குப் பொருளான, நீதிப் பெருமானை
சிவபெருமானுடைய சந்நிதிகளிலே. அற நெறியை ஓதும் பிரபந்தமாகிய
சிவநூலாம 'திருநெறித் தமிழ்' எனப்படும் தேவாரத்தைச் (சம்பந்த
மூர்த்தியாய்) ஓதின ஒளி வேலனே!

காட்டில் குறப் பெண் வள்ளியை விரும்பி அடைந்த ஞான மொழி
பேசும் குமாரக் கடவுளே! மேலான பொருளே! காசித் தலத்தில்
பிரபலமாக வீற்றிருக்கும் பெருமானே!

(18)

219 சாரங்கா (8½) ஏ (1½+4+3) 219

வேழம் உண்ட விளாகனி அது போல

மேனி கொண்டு வியாபக மயல் ஊறி

நாளும் மிண்டர்கள் போல் மிக அயர்வாகி

நாளும் நைந்து விடாது அருள் புரிவாயே

மான அன்று அமண் நீசர்கள் கழு ஏற

வாதில் வென்ற சிகாமணி மயில் வீரா

கான கண்டன் உமாபதி தரு பாலா

காசி கங்கையில் மேவிய பெருமானே!

கும்பகோணம் 220

220 அடாணவேரி (8) (-¾)ஆதி

கறுத்த குஞ்சியும் வெளிறி, எழுங் கொத்(து)

உருத்த வெண்பலும் அடைய விழுந்து, உட்

கருத்துடன் திகழ் மதியும் அருண்டுசெ அருள் நோயாற்

கலக்கமுண்டு அலம அலம் உற, வெண்டிப

பழுத்து, எழும்பிய முதுகு முடங்கக்,

கழுத்தில் வந்து இளை இருமல் ஒதுங்கக் கொடு மேனி

அறத் திரங்கி ஊர் தடி கை நடுங்கப

பிடித்து, இடும்புறு மனைவியு நிந்தித்து,

அடுத்த மைந்தரும் வசைகள் விளம்ப சடமாகி

219

மூழம் என்னும் நோய் உண்ட விளாம்பழம் போல (ஓடு மாத்திரமாயுள்ள) (உள்ளிருக்கும் சத்து அற்ற) மேனியை அடைந்து எங்கும் காமஇச்சை கூறிப் பரவி எந்நாளும அறிவின்மையில் வலிமை கொண்ட மூடர்கள் போன்று மிகவும் தளர்ந்து அடைந்து நானும் மெலிந்து வாடடமுதபடி அருள் புரிவாயாக!
(அன்று) முன்பு, சமணர்களாகிய அசுத்தர்கள் கழுவிலேறி(மாள) மாறும் வண்ணம் (வாது செய்து)அவ் வாதில் வென்ற சிகாமணியே! மயில் வீரனே!
விஷமுண்ட கண்டனாகிய உமை கணவனும் சிவபெருமான தந்த பாலனே காசித் தலத்தில் கங்கை நதிக்கரையில் எழுந்தருளியுள்ள பெருமானே!

220

கும்பகோணம்

(220) கறுத்த மயிரும் வெளுத்துப் போய், எழுந்து வரிசையாய் உருவு கொண்டிருந்த வெள்ளைப் பற்களும் எல்லாம் விழுந்து போய், உள்ளே கருத்துக்களுடன் விளங்கியிருந்த புத்தியும் மருட்சி அடைந்து – மயக்க அறிவாகி, (உடலைச்) சுருட்டி மடக்கும நோயால்
கலக்கம் அடைந்து (இவ் வாழ்க்கை) போதும் போதும் என்னும் மனநிலை வர (முவடி) நீர வறறிப் பழுத்த பழமாய், நிமிர்ந்தோங்கி இருந்த முதுகு வளைவு உறக், கழுத்தில (நெஞ்சில்) வந்து கோழையும் இருமலும் ஒதுங்கி நிற்கக். கொழுத்திருந்த மேனியானது
மிகவும (திரங்கி) வற்றிச் சுருங்கி, ஒரு தடியைக் கையிலே நடுக்கத் துடன் பிடித்து, அவமதிப்புக்குட்பான மனைவியும் இகழ, பத்தித் துணா பிள்ளைகளும் பழிக்க, அறிவில்லாத பொருள் போலாகி

அழுக்கு அடைந்து ஒழுகும் உடல் பங்கப்
பிறப்பெனும் கடல் அழிய உழன்றிட்டு
அருத்தி இருந் திருவடிகளை என்று உற் றிடுவேனோ
புறத்தலம் பொடிபட மிகவும் கட்
டறப் பெருங்கடல் வயிறு குழம்பப
புகட்டு அரங்கிய விரக துரங்கத் திறல் வீரா

பொருப்பு உரம் படர் கிழிபட வென்று அடு
அரக்கர் வன்தலை நெரிய நெருங்கிய
புதைக்குறும் தசை குருதிகள் பொங்கப் பொரும்வேலா

சிறுத்த தண்டைய மதலையொர் அகசக
சினத்து மிச்சு அரி, திரி தரு குன்றத்
தினைப்புனம் திகழ் குறமகள் கொங்கைக் கிரி மேவிச
செருக்கு நெஞ்சுடை முருக, சிகண்டிப்
பரிச் சுமந்திடு குமர, கடம்பத்
திருக்குடந்தையில் உறைதரு கந்தப பெருமாளே

(221) மோகனம் (16) ஆதி 2 களை 22)

செனித்திடும் சல சாழலும் உளழலும்
வினைத்திடுங் குடல் பீறிய பீறிய
செருக்கொடுஞ் சதை பீளையும் ஈளையும் உடனாடே

உடலெலாம் அழுக்கு சேர, வேதனைப்படும் உடலுக்கு, பாவத்துக்கு இடமான
பிறப்பு என்கின்ற கடலில் அழிந்து போவது ஒழிந்து, (இருந்) பெருமை
வாய்ந்த (உனது) திருவடிகள் அடுத்து-சரண்புகுந்து-என்று நான் பொருந்தி இருப
வெளியிடங்கள் எல்லாம் பொடிபட்டு மிகவும் நிலை கலங்கவும், பெரிய
கடலும் அதனது உட்புறமெல்லாம் குழம்பிக் கலங்கவும், (ஆங்காங்குள்ள) அசுரர்
கள மீது (புகட்டு) புகவிட்டு அவர்களை அரகதிய- தேய்த்துச் சிதைத்த
சாமாத்தியமுள்ள குதிரையாகிய மயிலேறும் பராக்ரமசாலியாகிய வீரனே!
கிரௌஞ்சகிரியின் (படா உரம்) பரவியிருந்த வலிமை பிளவு உண்டு அழிந்து
போகும்படி வென்று, (பகைவர்களை) அடு- கொன்று, அரக்கர்களின்
வலிமை கொண்ட தலைகள் நெரிபட்டு அழிய, நெருங்கிச் சென்று உள்ளடங்கி
புள்ள தசை, ரத்தம் இவைகள் மேலெழப் போர் செய்த வேலனே!
சிறிய தண்டைகள் அணிந்த (வேடுவக்) குழந்தைகள் பயப்படும்படி, கோபம்
மிக்க சிங்கம் திரிகின்ற (வள்ளி) மலையில் தினைப்புனத்தில் விளங்கி
யிருந்த வள்ளியின் கொங்கையாம் மலையை விரும்பி அடைந்து (அதனால்)
மகிழ்ச்சி கொண்ட நெஞ்சத்தை உடைய முருகனே! மயில் என்னும் குதிரை
அமர்கின்ற குமரனே! கடம்பனே! திருக்குடந்தையில் வீற்றிருக்கும்
கந்தப் பெருமானே!

221

(21) பிறப்பு என்கின்ற (குலம்) பொய்ம்மையொடு கூடிய (சாழல்-கூத்துவகை
மகளிர் விளையாட்டு) சாழல் என்ன! (ஊழல்) அந்தப்பிறப்புடன் கூடிய ஆபாசம் என்ன,
பிறப்பில் ஏற்படும் குடல், அந்தக் குடலைக் கிழித்தெடுப்பது போல மேலேக்கி
முகின்ற ஆணவம் என்ன! அந்த உடலில் உள்ள சதை ஏன், கோளழை என்ன!

தெளித்திடும் பல சாதியும் வாதியும் (20)
இரைத்திடும் குலமே, சிவ காலி படர்,
சினத்திடும் பவ நோயினவே இதை அனைவோரும்
கனைத்திடும் கலிகாலம் இதோ என
எடுத்திடும் சுடு காடு புகா என
கவிழ்த்திடும் சடமோ பொடியாய் விடும் உடல்மேனி

கடுக்கனும் சில பூடணம், ஆடைகள்
இருக்கிடுங் கலையே பல ஆசைகள்
கழித்திடும் சிவ யோகமும் ஞானமும் அருள்வாயே

தனத்தனந்தன தானன தானன
திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து, துந்துமி தாரை விராண மொகு அடல் பேரி
சமர்தத மொன்றிய தானவர் சேனைய
வளைத்து வெகுசின வேல் விடு சேவக,
சமைத்(து) உணர்ந்திடு மாதவர் பால் அருள் புரிவோனே
தினைப்புனந்தனிலே மயலால, ஒரு
மயிற பதந்தனிலே சரண நான என
திருவபுயம் தரு மோகன மானினை அணைவோனே
சிவக் கொழுங் சுடரே, பரனுதிய
தவத்தில வந்துறு பால, க்ருபாகர,
திருக்குடந்தையில் வாழ முருகா, சுரர் பெருமாளே

ஏறபட்ட பல ஜாதி என்ன! வாதிப்பது என்ன! கூச்சலிட்டுப்
பேசும் குலத்தவர் என்ன! சில சமயங்களில் துன்பம்-வருத்தம்; கோபித்
து வருவது போல மிகுந்து வரும் பிறப்பு என்ற நோய் என்றே இவ்வாழ்வை யாவரும்
நலிந்து வரும் கலிகாலத்தின் கூத்தோ இது என்று கூறுவதும்,
(பிணத்தை) எங்கள் சுடுகாட்டுக்குப் போக என்று (கூறுவதும்) அங்கே போய்
கவிழ்க்கப் படுவதுமான இந்த உடல் (தீயால்) சாம்பற் பொடியாகி
விடும்; அத்தகைய உடலை நான் விரும்பிப் போற்றி
கடுக்கன் ஆகிய சில ஆபரணங்களை அணிவது என்ன! உடைகள் அணி
வது என்ன! இருக்கு வேத மந்திரங்களைப் பெறப்படும் (கலை) சாத்திர நூல்
கள் படிப்பது என்ன! பல வகை ஆசைகளைக் கொண்டிருப்பது என்ன!
ஆக இவையெல்லாவற்றையும் நீக்க வல்ல சிவயோகத்தையும்
சிவ ஞானத்தையும் அருள் புரிவாயாக

தனத்த தந்தன தானன தானன திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து என்று (துந்துபி) பறை, (தாரை) நீண்ட ஊதுகுழல், (திமிலை)
பெரிய பறை இவையுடன் வெற்றி முரசு இவைகளுடன் கூடிப்
(பொருதலுக்கு) போருக்கு என்று கூடி வந்த அசுரர் சேனையை வளைத்துக்
கொடிய கோபம் கொண்ட வேலாயுதத்தைச் செலுத்தின பராக்ரம
சாலியே! (உனது) திறமையைத் தெரிந்த முனிவர்களுக்கு அருள்பவனே!
தினைப்புனத்திலே மயலால், ஒப்பற்ற மயில் போன்ற வள்ளியின் பாதத்
தில் அடைக்கலம் நான் என்று (நீ) கூற, தனது திருப்புயங்களை உனக்குத்
தந்த மயக்க வல்ல மான் போன்ற வள்ளியை அணைபவனே
சிவத்தினின்றும் தோன்றிய செவ்விய சுடரே! தவம் செய்வோர் பொருட்டுப் பரம
ஒளி வெளித்தோன்றி வந்தருள் பால குருநாதனே! திருக்குடந்தையில் வாழும் சுரர்க
தேவர்கள் பெருமானே!

குன்றத்தூர் 222

222 லதாங்கி (7½) ⊖ 4+½+2

தரையினில் வெகு வழி சார்ந்த மூடனை,
வெறியனை, நிறை பொறை வேண்டிடா, மத
சடலனை, மகிமைகள் தாழ்ந்த வீணனை மிகு கேள்வி

தவநெறிதனை விடு தாண்டு காலியை,
அவமதி அதனில் பொலாங்கு தீமை செய்
சமடனை, வலிய அசாங்கமாகிய தமியேனை
விரை செறி குழலியர், வீம்பு நாரியர்
மதி முக வனிதையர் வாஞ்சை மோகியர்
விழி வலை மகளிரொடு ஆங்கு கூடிய வினையேனை.

வெகு மலரது கொடு வேண்டியாகிலும்
ஒரு மலர் இலை கொடும் ஓர்ந்து யான் உனை
விதமுறு பரிவொடு வீழ்ந்து தாள் தொழ அருள்வாயே
ஒருபது சிரமிசை யோங்கு ராவணன்
இருபது புயமுடன் ஏந்தும் ஏதியும்
ஒரு கணைதனில் அற, வாங்கு மாயவன் மருகோனே
உனது அடியவா, புகழ ஆய்ந்த நூலினர்
அமரர்கள், முனிவர்கள், ஈந்த பாலகர்
உயர் கதி பெற அருள் ஓங்கு மாமயில் உறைவோனே

22 மண்ணுலகில் பல(தீய) வழிகளிலும் போய் கெடுகின்ற அறிவில்லாதவனை, குடிவெறி கொண்டவன் போன்ற பித்தனை. நீதி, பொறுமை முதலிய நற்குணங்களை விரும்பாத (மத) செருக்கு கொண்ட அறிவிலாப் பொருள் போன்றவனை. ஒரு மகிமையும் இல்லாத தாழ் நிலையில் இருக்கும் வீணனை. மிகுந்த நல்ல கேள்வியையும்

தவநெறியையும் விட்டுக் கடை வழியில் திரிபவனை கெட்ட புத்தியால் கேடு தீமை செய்கின்ற குணங்கெட்டவனை, மிக அழுங்கினமுடைய துணையற்றவனை

நறுமணம் நிறைந்த கூந்தலை உடையவர், பிடிவாதமுள்ள மாதர், சந்திரனை ஒத்த முகத்தை உடைய மாதர், விருப்பத்தை எழுப்பும் காம மயக்கிகள், கண் என்னும் வலையை வீசும் மகளிர் - இத்தகையோருடன் அவ்வச் சமயங்களில் கூடிய தொழில் உடையவனாகிய தீவினை மிகுந்தவனை

நிரம்ப மலர் கொண்டு விரும்பிப் பூசித்தாகிலும், அல்லது ஒரு பூவோ ஒரு இலையோ கொண்டாகிலும், உன்னை நினைந்து, நல்ல வகையான அன்புடன் கீழே வீழ்ந்து உனது திருவடியைத் தொழுமாறு அருளுவாயாக.

பத்துத் தலைகளுடன் போருக்கு வந்த ராவணன், இருபது கரங்களுடன் வந்தினவனானது, ஒரே பாணத்தால் அறுபட்டு விழும்படி (பாணத்தைச்) செலுத்தின திருமாலின் மருகனே!

உனதுடைய அடியார்களும், உனது திருப்புகழை ஆராய்ந்த தால் வல்லவர்களும், தேவர்களும், முனிவர்களும், கொடையால் ரக்ஷிப்போர்களும் உயர்ந்த நற்கதியைப் பெற, அருள் விளங்கும் அழகிய மயிலில் வீற்றிருப்பவனே!

குறைகழல் பணிவொடு கூம்பிடார், பொரு
கனமிசை அறமது தீர்ந்த தரார்கள்
குலமுழுது அனைவரு மாய்ந்து தூள் எழ முனிவோனே

கொடு விடம் அது தனை வாங்கியே திரு
மிடறினில் இரு என ஏந்தும் ஈசுரர்
சுரபரன் என வரு கூந்தனா உறை பெருமானே.

கோடிநகர் (குழகர் கோயில்) 223

(223) கேதாரகௌளை (2½) (1½ H)

நீல முகிலான குழலான மடவார்கள் தன
நேயம் அதிலே தினமும் உழலாமல்
நீடு புவியாசை பொருளாசை மருளாகி அலை
நீரில் உழல் மீன் அது என முயலாமல்

காலனது நா அரவ வாயில் இடு தேரை என
காய(ம்) மருவு ஆவி விழ அஞ்சா முன்

காதலுடன் ஓதும் அடியார்களுடன் அடி உரு
கால் முருக வேள் எனவும் அருள்தாராய்
சோலை பரண் மீது நிழலாக தினை காவல் புரி
தோகை குறமாதினுடன் உறவாடி

ஒலிக்கின்ற கழல் அணிந்த உனது திருவடியை தாழ்மையுடன் (22)
கும்பிடாதவர்களும், சண்டை செய்யும் போர்க்களத்தே தரும நெறியை கைவிட்டவர்களுமான சூராதி அவுணர்களது குல முழுமையும் மாண்டு போய்ப் பொடியாகும்படிக் கோபித்தவனே!

* கொடிய விஷத்தைக் 'கொடு' என வாங்கி, அழகிய கழுத்தினில் இரு என்று அதை நிறுத்தி, அங்கேயே அதைத் தாங்கி நிலைக்க வைத்த சிவபெருமானுக்குக் குருமூர்த்தி எனவுந்துள்ள கூத்தூரில் உறை பெருமானே

கோடி நகர் (குழகர் கோயில்) 223

(223)

* கரியமேகம் போன்ற கூந்தலைக் கொண்ட மாதர்களின் கொங்கை மேலுள்ள ஆசையிலே நாள் நாள் தோறும் அலைச்சல் உறுவதும்

நீண்ட மண்ணாசை, பொன்னாசை இவற்றில் மயக்கம் கொண்டு, அலை மிகுந்த கடல் நீரில் அலைச்சலுறும் மீனைப் போல் உழலும் பொருட்டு முயற்சி செய்யாமல்

காலனது வசைப் பேச்சாகிய பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல, இந்த உடலிலுள்ள உயிரானது அவன் கையில் அகப்படு விடும்படி

* அந்தக் காலன் எனை அணுகுவதற்கு முன்பாக

அன்புடன் உன்னை ஓதுகின்ற அடியார்களுடன் விரும்பி, ஒரு முறையாவது 'முருகவேள்' என்று நான் புகழுமாறு நின் திருவருளைத் தாராய்

(வள்ளிமலைக் காட்டிலுள்ள) சோலை மரங்கள் தினைப்புனப் பரண்மீது நிழல் தர தினைப்புனங்களைக் காவல் செய்து வந்த, மயில் போன்ற சாயலையுடைய வள்ளியுடன் உறவு கொண்டாடி (நீ வள்ளியைக் கொண்டு செல்ல)

சோரனென நாடி வருவார்கள் வனவேடா விழி
சோதி கதிர் வேல் உருவு மயில் வீரா
கோல அழல் நீறு புனை ஆதி சருவேசரொடு
கூடி விளையாடும் உமை தரு சேயே

கோடு முக ஆனை பிறகான துணைவா குழகர்
கோடி நகர் மேவி வளர் பெருமானே

கோடை நகர் 224

(224) மாயா மானவு கௌளா (5½) (-) 1+½+½+1½

ஆதி முதல் நாளில் என்றன தாய் உடலிலே இருந்து
ஆக(ம்) மலம் ஆகி நின்று புவி மீதில்
ஆசையுடனே பிறந்து நேசமுடனே வளர்ந்து
ஆள அழகனாகி நின்று விளையாடிப்
பூதர மெலாம அலைந்து மாதருடனே கலந்து
பூமி தனில் வேணும என்று பொருள்தேடி
போகம அதிலே உழன்று பாழ நரகு எய்தாமல் உன்றன
பூ அடிகள் சேர அன்பு தருவாயே
சீதை கொடு போகும் அந்த ராவணனை மாளவென்ற
தீரன் அரி நாராயணன் தன மருகோனே
தேவர் முநிவோர்கள் கொண்டல் மால அரி பிரமாவு நின்று
தேட அரிதான வனதன் முருகோனே

-தாவன என்று உன்னைத் தேடி வந்த காட்டு வேடர்களெல்லாம் மாண்டு விழ
மிகக் ஒளி வீசும் வேலாயுதத்தைச் செலுத்தின மயில வீரனே!
-அழகுள்ளதும, நெருப்பில் சுட்டெரிக்கப்படும் திருநீறை அணிந்துள்ள ஆதிய
பிரானும், எல்லாவற்றிற்கும் ஈசனுமான சிவபெருமானோடு கூடி விளையாடு
கின்ற உமையம்மை பெற்ற குழந்தையே!
தந்தத்தை முகத்திற்கொண்ட கணபதிக்குப் பின் வந்த துணைவனே! குழகர்
என்னும் திருநாமத்துடன் சிவபெருமான் வீற்றிருக்கும் கோடி எனும்
தலத்தில் விரும்பி வீற்றிருக்கும் பெருமானே!

கோடைநகர் 224

(224)

. முதன் முதலிலே என்னுடைய தாயின் உடலில் இருந்து, உடல் அழுக்குடன்
இருந்து (பின்பு) இந்தப் பூமியிலே
ஆசையுடன் பிறந்து (பெற்றோர் சுற்றத்தார் இவர்தம்) அன்பால் வளர்ந்து,
ஆள் அழகன் எனும்படியாக விளங்கி விளையாடி
பூமியெல்லாம் அலைந்து திரிந்து, பெண்களுடனே மருவிக் கலந்து,
பூமியில் வேண்டியிருக்கிறதென்று பொருள்களைத் தேடி
போர்களிலேயே உழன்று, பாழான நரகத்தை நான் அடையாமல், உன்னுடைய
மலரன்ன திருவடிகளைச் சேர அன்பு தந்தருளவாயே!
சீதையைக் கொண்டு போன அந்த ராவணனைக் கொன்று வென்ற தீரன்
ஹரி நாராயணனுடைய மருகனே!
-தேவர்கள், முனிவர்கள், மேகநிறம் கொண்ட திருமாலும் ஹரி பிரமமா இவர்க
ளெல்லாம் நின்று தேடியும், காணுதற்கு அரியவராய் நின்ற சிவனது குழந்தையே

கோதை, மலை வாழுகின்ற நாதர் இட பாக நின்ற
கோமளி அநாதி தந்த குமரேசா
கூடி வரு சூரர் தங்கள் மார்பை இரு கூறு கண்ட
கோடை நகர் வாழ வந்த பெருமாளே.

---

(225) தரஹரப்ரியா (5½) 225 (உ) 1+½+½+½

சால நெடுநாள, மடந்தை காயம் அதிலே அலைந்து
சாம் அளவதாக வந்து புவிமீதே
சாதகமான பின்பு சீறி அழுதே கிடந்து
தாரணியிலே தவழ்ந்து விளையாடிப்
பாலன் எனவே மொழிந்து பாகு மொழி மாதர் தங்கள்
பார தனம் மீ(து) அணைந்து பொருள் தேடி
பார் மிசையிலே உழன்று பாழ் நரகு எய்தாமல், உன்று
பாத மலர் சேர அன்பு தருவாயே
ஆலம் அமுதாக உண்ட ஆறு சடை நாதர் திங்கள்
ஆ(று) அரவு பூணா தந்த முருகோனே

ஆனை மடு வாயில் அன்று மூலம் என ஓலம் என்ற
ஆதி முதல் நாரணன் தன் மருகோனே
கோல மலர் வாவி எங்கும் மேவும் புனம் வாழ மடந்தை
கோவை அமுது(ஊ)றல் உண்ட குமரேசா
கூடி வரு சூர் அடங்க மாள வடி வேல் எறிந்த
கோடை நகர் வாழ வந்த பெருமாளே

தேவி, கயிலைமலையில் வாழ்கின்ற சிவபெருமானது இடது பாகத் (24) தில் கிடந்து கொண்டிருக்கும் அழகி. ஆதியில்லாதவள் தந்த குமரேசனே ஒன்று கூடி வந்த சூரர்களுடைய மார்பை இரண்டு கூறாகக் கண்ட கோடை நகரில் வாழ வந்த பெருமானே!

---

(225) 225

மிகவும் நீண்ட நாட்கள், ஒரு பெண்ணின் கருவிலே கிடந்து அலைச்சலுற்று (பின்பு) சாவும் அளவுக்குள்ள துன்பத்துக்கு ஆளாகி வந்து பூமியிலே பிறப்பு என்பதை அடைந்த பின்னர், பலமாக அழுது, கிடந்து, தரையிலே தவழ்ந்து விளையாடி (பின்பு)

மழலைப் பேச்சுக்கள் பேசி, சர்க்கரை போல இனிக்கும் சொற்களைக் கொண்ட மாதர்களின் பெருத்த தனத்தை அணைந்து, பொருள் தேட வேண்டி பூமியிலே திரிந்து (இறுதியில்) பாழான நரகத்திற் போய்ச் சேராமல், பொருந்திய உனது திருவடி மலரை சேர்வதற்குரிய அன்பைத் தந்தருள்வாயே-

விஷத்தை அமுதமாக உண்டு, கங்கையாற்றைச் சடையில் சூடியுள்ள நாதர், சந்திரனையும், படமெடுத்தாடும் பாம்பையும் பூண்டுள்ளவர் ஆகிய சிவபெருமான் தந்த முருகனே!

கஜேந்திரன் அன்று மடுவிடத்தே 'ஆதிமூலமே' என்றும், 'நீயே தஞ்சம்' என்றும் கூவி அழைக்கப்பட்ட ஆதி முதல்வனை நாராயணனின் மருகனே அழகிய மலர்த்தடாகங்கள் எங்கும் இருந்த தினைப்புனத்தில் வாழ்ந்த வள்ளியின் கொவ்வைக் கனி போன்ற வாயின் அமுதூறலை உண்ட குமரேசனே! இரண்டு கூறாகியும் ஒன்று கூடி வந்த சூரன் அடங்கி ஒடுங்கக் கூரிய வேலைச் செலுத்தின கோடை நகரில் வாழ வந்த பெருமானே!

---

226) ஹம்ஸாநந்தி (10) (ஸ) 1½+2+½+2+3 226

ஞாலம் எங்கும் வளைந்து அரற்று — கடலாலே
நாளும் வஞ்சியர் உற்று உரைக்கும் — வசையாலே
ஆலம் உந்து மதித் தழற்கும் — அழியாதே
ஆறு இரண்டு புயத்(து) அணைக்க — வருவாயே
கோலம் ஒன்று குறத்தியைத் — தழுவு மார்பா
கோடையம்பதி உற்று நிற்கும் — மயில் வீரா
காலன் அஞ்ச வரைத் தொளைத்த — முதல், வானோர்
கால் விலங்கு களைத்து அறுத்த — பெருமானே

---

227) பிருந்தாவன ஸாரங்கா (7½) 227 (ஸ) 4+1½+2

தோழமை கொண்டு சலஞ் செய் குண்டர்கள்
ஓதிய நன்றி மறந்த குண்டர்கள்
சூழ் விரதங்கள் கடந்த குண்டர்கள், — பெரியோரைத்
தூஷண நிந்தை பகர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டு தகைந்த குண்டர்கள்
சூளுறவு என்பது இழந்த குண்டர்கள், — தொலையாமல்
வாழ நினைந்து வருந்து குண்டர்கள்
நீதி அறங்கள் சிதைந்த குண்டர்கள்
மான அகந்தை மிகுந்த குண்டர்கள் — வலியாலே
மாயையில் நின்று வருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள் கவர்ந்த குண்டர்கள்
வாதை நமன் தன் வருந்திடுங் குழி — விழுவாரே

226

பூமியின் எல்லாப் பக்கங்களிலும் வளர்ந்து கொண்டு ஒலிக்கின்ற கடலாலும்
தினமும் மாதர்கள் சேர்ந்து சொல்லும் வசைமொழியாலும்
விரகத்தைச் செலுத்துகின்ற சந்திரன் என்னும் நெருப்பாலும் அழிவுறுமல்
பன்னிரண்டு புயங்களாலும் (இவளை) அணைக்க வந்தருள்வாயே.
அழகு பொருந்திய குறத்தி வள்ளியைத் தழுவின மார்பனே!
கோடையம்பதியிற் பொருந்தி நிற்கின்ற மயில் வீரனே!
யமனும் அஞ்சும்படி கிரௌஞ்ச கிரியைத் தொளைத்த முதல்வனே! தேவர்களுடைய
கால் விலங்குகளை உடைத்தெறிந்த பெருமானே.

---

(227) 227

நட்பை வெளிக்காட்டி நண்பருக்கு வஞ்சனை செய்யும் கீழோர், போதித்த (கல்வி
கற்பித்த ஆசிரியருக்கு காட்ட வேண்டிய) நன்றியை மறந்த கீழோர், அனுஷ்டிக்க
வேண்டிய விரதங்களை விலக்கி அழித்த கீழோர், பெரியோரை
வைது, நிந்தித்து, இகழ்ந்து பேசின கீழோர், ஒருவருக்கு ஈவதைப் பார்த்து
அதைத் தடை செய்த கீழோர், சத்திய வார்த்தை என்பதை ஒழித்த கீழோர்
எப்போதும் அறிதலின்றித் தாமே

[illegible] நினைத்து அதற்காக வருந்தும் கீழோர், நீதியும் தருமமும் நீக்கிய
கீழோர், தன்னைப் பெரிதாக எண்ணிக் கொண்டு செருக்கு மிகுந்த கீழோர்,
ஆசை வலையால்

உலக மாயையில் நின்று வருந்தும் கீழோர், தேவர்கள்-கடவுளரின் சொத்தை
அபகரித்த கீழோர், ஆகிய இவர்கள் யாவரும், வேதனைக்கு இடமாகிய,
யமன் வருத்துகின்ற (நரக) குழியில் விழுவார்கள்

ஏழு மரங்களும் வன் குரங்கு எனும்
வாலியும், அம்பரமும், பரம்பரை
ராவணனும் சதுரங்க லங்கையும் — அடைவே, முன்
ஈடு அழியும்படி சந்த்ரனும் சிவ
சூரியனும் சுரரும் பதம் பெற
ராமசரந் தொடு புங்கவன் திரு — மருகோனே
கோழி சிலம்ப, நலம் பயின்ற
கலைப நடச் செய மஞ்சு தங்கிய
கோபுரம் எங்கும் விளங்கு மங்கல — வயலூரா
கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேலன் எனும் பெயர் அன்புடன திகழ்
கோடை எனும் பதி வந்த இந்திரர் — பெருமாளே.

228

சிக்கல்

(228) பந்து வராளி — (8) — ஆதி

புலவரை ரக்ஷிக்கும் தாருவே, மது
ரித குண வெறுப்பு ஒத்தும் பூவை மார்முலை
பொரு புய, திக்கு எட்டும் போய உலாவிய — புகழான
பொரு அரு நட்பும் பண்பான வாய்மையில்
உலகில் உனக்கு ஒப்பு உண்டோ எனு நல
பொருள்கள நிரைததுச செமபாத மாதிய — கவிபாடி
விலையில் தமிழ் சொற்கு உன போல் உதாரிகள்
எவரென மெத்தக கொண்டாடி வாத வெனும

ஏழு மராமரங்களும், வலிமை மிக்க குரங்காகிய வாலியும், அம்பரம் (26)
கடலும், சிறந்த பரம்பரையில் வந்த ராவணனும், சதுரங்க சேனைகள்
நிறைந்த இலங்கையும் மற்ற எல்லா வகைச் செல்வமும், முன்பு
வலிமை குன்றி அழியும்படியும், சந்திரனும், சிவசொரூபமாகிய சூரியனும்
தேவர்களும் தத்தம் பதவியிலே நிலைபெற 'ராமசரம்' என்னும் ராம மந்திரம்
கூடிய அம்பைச் செலுத்தின சிறப்புற்ற மூர்த்தியாகிய ஸ்ரீ ராமபிரானது மருகனே
கோழி இனிது கூவ, அழகு மிக்க தோகையையுடைய மயில் நடனம்
செய்ய, மேகங்கள் தங்கிய கோபுரங்கள் எங்கும் விளங்குகின்ற
மங்களகரமான வயலூரில் வாசம் செய்பவனே!

அழகிய தேவர்களும், தொண்டர்களும், மண்டலாதிபர்களும், 'வேலன்'
என்னும் திருப்பெயரை அன்புடன் புகழ்கின்ற, கோடை நகர் என்னும்
தலத்தில் எழுந்தருளிய இந்திராதியரால் துதிக்கப்பெற்ற பெருமானே

சிக்கல் 228

(228)

புலவர்கள் ஆதரித்து ரக்ஷிக்கும் கற்பக விருக்ஷமே! இனிமையான குணம்கொண்ட
மலைக்கு நிகரான மாதர் கொங்கையில் திளைக்கும் புயத்தவனே! திசை-
கள் எட்டிலும் போய் உலாவுகின்ற புகழாளனே!

ஒப்புவமை அற்ற நட்புத்தன்மை கூடிய சத்திய நிலையில் உலகிலே உனக்கு
ஒப்பாவார் ஒருவர் உளரோ என்று நல்ல பொருளுள்ள சொற்களை வரிசை-
யாக வைத்துச் செவ்விய முறையில் அமைந்துள்ள பாடல்களைப் பாடி
விலைமதிப்பற்ற தமிழ்ச்சொல்லை ஆதரிப்பதற்கு உன்னைப்போல சிறந்த
கொடையாளிகள் யார் உளர் என்று நிரம்பக் கொண்டாடி (புகழ்ந்து), தமது

வெறிகொரு ஹுத்தர்க்கு என்பாடு கூறிடு மிடி தீர

மிக அருமைப்பட உன் பாத தாமரை
சரணம் எனப் பற்றும் பேதையேன் மிசை
விழிஅருள் வைத்துக் குறைத வாழ்வையும் அருள்வாயே
இலகிய வெட்சிச் செந்தாம மார்புய
திலநுதல் மைக்கண் சிந்தூர வாள்நுதல
இமய மகட்குச சந்தானமாகிய முருகோனே

இளைய கொடிச்சிக்கும் பாக சாதனன்
உதவும ஒருத்திக்கும சீல நாயக
ஏழிலி எழிற் பெறும் காய மாயவன் மருகோனே
அலர் தரு புட்பத்து உண்டாகும் வாசனை
திசைதொறு முப்பத்து எண் காதம் வீசிய
அணி பொழிலுக்குச் சகசாரமாம் அளி இசையாலே
அழகிய திக்கற் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்காரமாய் வரும்
அசுரரை வெட்டி சங்காரமாடிய பெருமானே.

சிவபுரம் 229

(229) நீலாம்பரி (7½) (—) (1½+2+4)

மண மெனும் பொருள் வான், அறை கால, கனல்
புனலுடன் புவி கூடியதோர் உடல்
வடிவு கொண்டு அதிலே பதிமூன்று வகையாலே

வாழ்வே பெரிது என்னும் தீவிர உணர்ச்சி கொண்டுள்ள லோபிகளிடம் ஏன வருத்தங்களைப் போய் முறையிடும் தரித்திர நிலை நீங்க மிக்க பிரயாசையுடனே உனது பாத தாமரைகளைப் புகலிடம் எனப் பற்றியுள்ள பேதையாகிய என் மீது நீ திருக்கண் அருள் வைத்துக் குறைவிலா வாழ்வை (பேரின்ப வாழ்வை)த் தந்தருளுவாயே!

விளங்குகின்ற வெட்சிப் பூவாலாய சிவந்த மாலை அணிந்த மார்பும், புயமும் கொண்டவனே! வில்லைப் போன்ற புருவத்தையும், மைபூசிய கண்களையும் சிந்தூரம் அணிந்த ஒளி வீசும் நெற்றியையும் கொண்ட இமயமலைப் புத்திரியாகிய பார்வதிக்கு மைந்தனாக வந்த முருகோனே.

இளைய மலைநாட்டுப் பெண்ணாகிய வள்ளிக்கும், (பாகசாதனன) இந்திரன் பெற்ற ஒப்பற்ற தேவசேனைக்கும் உரிய சீலநாயகனே! மேகத்தின் அழகைக் கொண்ட திருமேனியை உடைய திருமாலின் மருகனே!

மலர்கின்ற புஷ்பத்தில் உண்டாகின்ற வாசனையானது எல்லாத் திசைகளிலும் முப்பத்தெட்டு காதம் (380 மைல்) வரை வீசுகின்ற அழகிய நந்தவனங்களில் சஞ்சரிக்கும் வண்டின் இசை ஒலியால்

அழகு பெற்று விளங்கும் சிக்கல் சிங்கார வேலனே! போரிடையே மிகவும் பொங்கிக் கோதிப்புடனே வந்த அசுரர்களை வெட்டிச் சங்கரித்த பெருமாளே.

<u>சிவபுரம்</u> 229

(229) மாமை என்னும் ஒரு பொருளுடனே, ஆகாயம், எறிகின்ற காற்று, நெருப்பு, நீர் இவையுடன் மண் (ஆகப் பஞ்ச பூதங்கள்) கூடியதான ஒரு தேகம் என்னும் உருவத்தைக் கொண்டு அதிலே (13×7) 91 தத்துவக் கூட்டங்களின் கூறுபாடுகளாலே

வரு சுகம் துயர் ஆசையிலே உழல்
மதியை வென்று பராபர ஞான நல்
வழி பெறும்படி நாய் அடியேனை நின் அருள் சேராய்

சென்னி, சங்கரி, ஆரணி, நாரணி,
விமலி, எண்குண பூரணி, காரணி,
சிவை, பரம்பரை ஆகிய பார்வதி அருள்பாலா
சிறை புகும் சுரர் மாதவர் மேல் பெற
அசுரர் தங்கிளையானது வேரற
சிவன உகந்து அருள் கூர் தரு வேல் விரு முருகோனே
கனகன் அங்கையினால் அறை தூணிடை
மனித சிங்கமதாய வரை பார் திசை
கடல் கலங்கிடவே பொருதே உகிர் முனையாலே
கதற வென்றுடல் கீணவன் ஆருயிர்
உதிரமும் சிதறுது அமுதாய் உணும்
கமல உந்தியன் ஆகிய மால் திரு மருகோனே
தினகரன், சிவவேள், அருண மாதவர்
சுரர்கள் இந்திரனா உரகாதியர்
திசை முகன, செரு மா மறையோர் புகழ் அழகோனே
திருமடந்தையர் நால் இருவோர் நிறை
அகமா6 அம் பொனின் ஆலய நீடிய
சிவபுரம் தனில் வாழ் குரு நாயக பெருமாளே.

ஏற்படுகின்ற இன்பம், துன்பம், ஆசை எனும் இவற்றிலே உழலுகின்ற
என் புத்தியை நான் ஜெயித்து அடக்கி, மிக மேலானதான ஞானமெனும்
நன்னெறியைப் பெறும்படியாக, நாயினைய அடியேனுக்கு உன்னுடைய
திருவருளைக் கூட்டுவிப்பாயாக

*(உலகங்களின்) தோற்றத்திற்கு ஆதாரமானவள், சங்கரி, வேத முதல்வி,
நாராயணி, குற்றமற்றவள், எண்குணங்களும் நிறைந்தவள், எவற்
றிற்கும் காரணமானவள், சிவை, பராபரை ஆகிய பார்வதி அருளிய பாலனே
சிறையில் அடைபட்டிருந்த தேவர்களும், பெரிய முனிவர்களும், மேலான
சுக நிலையைப் பெற, அசுரர்களுடைய கூட்டமெல்லாம் வேரறுத்திய, சிவ
பெருமான் மகிழ்ந்து அருளிய கூர்மை கொண்ட வேலைச் செலுத்தின முருகனே

*இரணியன் தனது அங்கையால் அறைந்த தூணினின்றும் நரசிங்கமாய்
மலை, பூமி, திசைகள், கடல் இவையாவும் கலக்கம் கொள்ளும்படித் (தோன்றி)
(அந்த இரணியனுடன்) போர் செய்து, நகத்தின் நுனியாலே
கதறியழும்படிச் செயம் கொண்ட, அவன உடலைக் கீறிப்பிளந்து,
அவனது அரிய உயிரை இரத்தம் சிதறுத வண்ணம் அமுதாக உண்ட
தாமரை போலும் உந்தியை உடையவராகிய திருமாலின் அழகிய மருகனே
சூரியன், (கரும்பு) வில் கொண்ட மன்மதன், அருள் நிறைந்த முநி
வர்கள், தேவர்கள், இந்திரர்கள், நாகலோகத்துத் தலைவர்கள், பிரமன்
செருவிய- சிறந்த அந்தணர்கள்- போற்றிய புகலும அழகனே

*அஷ்ட லக்ஷ்மிகள் நிறைந்த வீடுகளுடன், அழகிய பொன்னால் ஆய
கோயில் சிறப்புற்று விளங்கும், சிவபுரம் என்னும் தலத்தில் வாழ்கின்ற
குருமூர்த்தியே! பெருமானே!

---

* தன லக்ஷ்மி, தான்ய, தைர்ய, வீர, வித்யா, கீர்த்தி, விஜய, ராஜ்ய

சிறுவை

230

(230) சிந்துபைரவி (2½) ⊖ ¾ (1+½)

அண்டர் பதிகுடி ஏற மண்(டு) அசுரா உருமாற
அண்டர் மன(ம) மகிழ் மீற அருளாலே
அந்தரியுடன் ஆடு சங்கரனு(ம) மகிழ்கூர
ஐங்கரனும் உமையாளும் மகிழ்வாக
மண்டலமும் முநிவோரும எண் திசையில் உள பேரும்
மஞ்சினனும் அயனும் எதிர் காண
மங்கையுடன் அரிதானும் இன்பமுற மகிழ கூற
மைந்து மயிலுடன் ஆடி வரவேணும்
புண்டரிக விழியாள, அண்டர் மகள மணவாள,
புந்தி நிறை அறிவாள, உயர் தோளா
பொங்கு கடலுடன், நாகம் விண்டு, வரை இகல் சாடு
பொன் பரவு கதிர் வீசு வடிவேலா
தண்டரள மணிமார்ப செம்பொன் எழில் செறிரூப
தண் தமிழின மிகு நேய முருகேசா
சந்ததமும் அடியாரகள் சிந்தையது குடியான
தண் சிறுவை தனில் மேவு பெருமானே.

---

(231) கேதாரம் (8½) ⊖ (4+1+½+2) 231

சீதள வாரிஜ பாதா நமோ நம
நாரத கீத விநோதா நமோநம,
சேவல,மா மயில் ப்ரீதா நமோநம மறை தேடும்

தேவர் தலைவனும் இந்திரன் (தனது பொன்னுலகிற்) குடியேறவும்,
நெருங்கி வந்த அசுரர்கள் உருமாறி இறக்கவும், தேவர்கள் மனத்தில்
மகிழ்ச்சி அதிகமாகக் கொள்ளவும், அன்று காட்டின அத்தகைய அருளோடு
கிரியுடன் ஆடின சங்கரன் மகிழ்ச்சி மிகக் கொள்ளவும், விநாயகரும்
பார்வதியும் களிப்பு மிகக் கொள்ளவும்
பூமியில் உள்ளோரும் முனிவர்களும், எட்டுத் திசைகளில் உள்ளவர்களும்,
இந்திரனும், பிரமனும் எதிர் நின்று காணவும்
(அலர்மேல் மங்கை) இலக்குமியுடன் திருமாலும் இன்பத்துடன் தமது மகிழ்ச்சியை
எடுத்து ஓதவும் வலிமை நிறைந்த மயிலுடன் ஆடி (என்முன்) வர வேணும்.
தாமரை மலரொத்த கண்களை உடையவனே! தேவர் வளர்த்த மகள் தேவசேனையின்
மணவாளனே! அறிவு நிறைந்த ஞானமும் கொண்டவனே! உயர்ந்த புயங்களை உடையவனே
பொங்கின கடலுடன், எழுகிரிகள் பிளவு பட, கிரௌஞ்ச கிரியின (இகல்) வலிமையை
மாய்ந்தழித்து, பொன்னொளி பரப்பிச் சுடர் வீசும் கூரிய வேலனே
குளிர்ந்த முத்து மாலை அணிந்த அழகிய மார்பனே! செம்பொன்னின் அழகு சிறந்த
உருவத்தனே! நல்ல தமிழில் மிகுந்த நேசம் கொண்டுள்ளவனே! முருகேசனே!
எப்போதும் அடியார்களின் மனதே இடமாகக் கொண்ட, குளிர்ந்த சிறுவை
என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே!

231

(231) குளிர்ந்த தாமரை போன்ற திருவடிகளை உடையவனே! உன்னை வணங்கு
கின்றேன் வணங்குகின்றேன்! நாரத முனிவருடைய இசையில் மகிழ்ச்சி
கொள்பவனே நமோ நம! கோழிக் கொடியை உடையவனே! சிறந்த மயில்
மீது பிரியமுள்ளவனே நமோநம, வேதங்கள் தேடுகின்ற

ஏகமான ப்ரமாயா நமோநம
ஆகம சார சொரூபா நமோநம
தேவர்கள் சேனை மகீபா நமோநம — கதிதோய
பாதக நீவு குடாரா நமோநம
மா அசுரேச கடோரா நமோநம
பாரினிலே ஜெய வீரா நமோநம — மலை மாது
பார்வதியாள் தரு பாலா நமோநம
நாவல ஞான மனோலா நமோநம
பால குமாரசுவாமி நமோநம — அருள்தாராய்
போதக மாமுக னேரான சோதர
நீறு அணி வேணியர் நேயா, ப்ரபாகர,
பூ மகளார் மருகேசா மகோததி — இகல் சூரா

போதக மாமறை, ஞான, தயாகர,
தேனவிழ் நீப நருவாரு மார்பக
பூரண மாமதி போல் அறுமாமுக — முருகேசா

மாதவர் தேவர்களோடே முராரியும்,
மாமலர் மீதுறை வேதாவுமே புகழ்
மாநிலம் ஏழினும் மேலான நாயக — வடிவேலா
வானவர் ஊரினும் வீறாகி வீறு, அளகா
புரி வாழ்வினும் மேலாகவே, திரு
வாழ் சிறுவா புரி வாழ்வே, சுராதிபர் — பெருமாளே.

அழகான கீர்த்தியை உடையவனே நமோ நம! ஆகமங்களின் சாரமே சொரூபமாகக் கொண்டவனே நமோ நம! தேவர்களின் சேனைக்கு அரசனே நமோ நம! (அடியார்கள்) நற்கதியை அடையும் பொருட்டு (அவர்களுடைய) பாதகத்தைப் பிளந்து அழிக்கின்ற கோடாரியே நமோ நம பெரிய அசுரர் தலைவர்கள் அஞ்சும்படியான கொடுமை காட்ட வல்லவனே நமோ நம, பூலோகத்திலே ஜய வீரனாய் விளங்குபவனே நமோ நம. மலை மாது பார்வதிதேவி அருளிய பாலனே நமோ நம, வாக்கு வல்லமை உடையவனே, ஞான (மண உலா) மனத்தில் உலாக் கொள்பவனே நமோ நம; பால குமார சுவாமி நமோ நம, அருள் தாராய்

யானையின் அழகிய முகத்தைக் கொண்ட விநாயகருக்கு இனிய சகோதரனே! திருநீறு அணிந்த சடைப் பெருமான் சிவனுடைய அன்புக்கு உரியவனே! ஞானிக்கு இடமானவனே (ஞான சூரியனே) இலக்குமியின் மருகனே! ஈசனே! கடலைப் பகைத்து (அது சுவற வேல் விட்ட) தீரனே!

சிறந்த வேதங்களை (போதக) உபதேசிக்க வல்லவனே! ஞான சொரூபனே! தயைக்கு இருப்பிடமானவனே! தேன் சொட்டும் கடப்ப மாலையின் நறுமணம் நிறைந்து வீசும் மார்பை உடையவனே! அழகிய பூர்ண சந்திரன் போல விளங்கும் ஆறுமுகனே! முருகேசனே!

தவமுனிவர்கள், தேவர்கள், அவர்களுடன், திருமாலும், சிறந்த தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் பிரமா – இவர்கள் யாவரும் புகழும், பெரிய உலகங்கள் ஏழினும் மேலான தலைவனாக விளங்குபவனே! வடிவேலனே!

தேவர்கள் ஊரினும் மேம்பட்டதாகி விளங்கி, குபேரன் திருநகர் அளகாபுரி வாழ்வினும் மேம்பட்ட சிறப்புடையதாக இலக்குமி வாசஞ் செய்யும் திருவாரூரியில் வாழும் செல்வமே! தேவர் தலைவர்களுக்குப் பெருமானே

(232) பீம்பளாஸ் (12) ஆதி திஸ்ர நடை

பிறவியான சடம் இறங்கி வழி இலாத துறை செறிந்து
பிணிகளான துயர் உழன்று தடுமாறி
பெருகு தீய வினையில் நொந்து, கதிகள் தோறும் அலை பொருந்தி
பிடிபடாத ஜனன நம்பி அழியாதே
நறை விழாத மலர் முகந்த அரிய மோன வழி திறந்த
நளின பாதம் எனது சிந்தை அகலாதே
நரர் சுராதியரும் வணங்கும் இனிய சேவைதனை விரும்பி
நயனதார அடியன் என்று பெறுவேனோ
வெறி வழாத முநிவர் தங்கள் நெறி வழாத பிலன் உழன்று
வெகு நிசாசரனை நினைந்து வினை நாடி

வெருவிலாமல அருள் புரிந்து மயிலில் ஏறி நொடியில வந்து
புனக மேவ தமிழ் புனைந்த முருகோனே

சிறுவராகி இருவர் அந்த கரி பிதாதி கொடு பொருஞ் சொல
சிலை இராமனுடன் எதிர்ந்து சமராடி

செயமதான நகர் அமர்ந்த அளகை போல வள மிகுந்த
திருவை மேவி அமரம் மிகுந்த பெருமாளே

பிறப்புக்கு ஏற்பட்ட உடலிற புகுந்து, நல்வழியல்லாத வழிகளில் நெருங்கிப் போய், நோய் முதலிய துக்கங்களில் வேதனைப்படுத தடுமாற்றம் அடைந்து பெருகும தீய வினைகளினால் கஷ்டப்பட்டு, பிறப்புகள் தோறும் அலைச்சல் அடைந்து (அதன் உண்மைத் தன்மை) புலப்படாத பிறப்பை விரும்பி அழிந்து போகாமல் தேன் நீங்காத மலர் நிரம்பக் கொண்டுள்ளதும், அருமையான மௌன வழியைத் திறந்து காட்டின (உனது) தாமரை போன்ற திருவடி என் மனத்தை விட்டு நீங்காமல் மனிதரும், தேவர்தலைவர்களும் வணங்கும் உனது இனிமையான தரிசனத்தை விரும்பி, நன்மை பெறும்படியான பாக்கியத்தை அடியேன் என்று பெறுவேனோ!

ஐம்பொறிகளும் தவறான வழியிற் போகாதபடி காத்த நக்கீர முனிவர், தமது (நெறி) நிதய அநுஷ்டான நெறியை (வழாத) தவறுதல் இல்லாத வழியில் நின்று காத்த (குகையிலே அகப்பட்டு எப்போதும் போல சிவத்யானத்திலேயே இருந்த) (பிலன்) குகையில் மன அலைச்சலுற்று, (பொரு) அவர்களைப் பொருது அழித்து நினைந்திருந்த அரக்கனை நினைந்து (வினைநாடி) அந்த அரக்கனிடமிருந்து பிழைக்கும் செயலை நாடினவரான நக்கீரருக்கு

ஏற்புற வகையில் அருள் புரிந்து, மயிலில் ஏறி நொடிப் பொழுதில் வந்து (குகையினின்றும் அவரை மீட்டு) புளகாங்கிதம் கொள்ளுமாறு, திருமுருகாற்றுப்படை என்னும் தமிழ் மாலையை ஏற்றுப் (புனைந்த) அணிந்து கொண்ட முருகோனே!,

சிறுவரான லவகுசர் என்னும் இருவரும் அந்த யானைப்படை, காலாட்படை இவைகளை கொண்டு, போரிடையே சொல்லும் சொற்களுடன் வில் ஏந்திய ஸ்ரீராமனுடன் எதிர்த்துப் போர் செய்து

வெற்றி கொண்ட நகரமானதும். அளகாபுரிபோல வளப்பம் மிகுந்துமான சிறுவையில் வீற்றிருந்து வரங்களை நிரம்பத்தரும் பெருமாளே

(233) ஜோனபுரி (6½) (ப) 5+1½

ஊனத் தசை தோல்கள் சுமந்த காயப் பொதி மாய மிகுந்த
ஊசற் சுடு நாறு குரம்பை மறைநாலும்
ஓதப்படும் நாலுமுகன தலை உற்றிடு கோலம் எழுந்து
ஓடித் தடுமாறி உழன்று தளராதிக
கூனித் தடியோடு நடந்து ஈனப்படு கோழை மிகுந்த
கூளச்சடம் ஈதை உகந்து புவிமீதே
கூசப் பிரமாண பிரபஞ்ச மாயக் கொடு நோய்கள் அகன்று
கோலக் கழலே பெற இன்று அருள்வாயே

சேனக்குரு கூடலில் அன்று ஞானத் தமிழ் நூல்கள் பகர்ந்து
சேனைச் சமணோர் கழுவின் கண் நிரைஏறத்

தீரத் திருநீறு புரிந்து மீனக்கொடியோன் உடல் துன்று
தீமைப் பிணி தீர உவந்த குருநாதா
கானச் சிறுமானை நினைந்து ஏனற் புனமீது நடந்து
காதற் கிளியோடு மொழிந்த சிலவேடா

காணக் கனியாக வளர்ந்து ஞானக் குறமானை மணந்து
காழிப்பதி மேவி உகந்த பெருமானே

அழிந்து போகும் தன்மையதான மாமிசம், தோல்கள், இவைகளைச் சுமக்கும்
உடற் சுமை, மாயம் மிகுந்ததும், பதன அழியும் தன்மையோடு கூடியதும், ஈற்றில்
சுடப்படுவதும், நாறுவதுமான கூடு, வேதம் நான்காலும்
ஓதப்படுகின்ற பிரமனால் ஏற்படுத்தப்பட்டு, அழகுடன் உருப்பெற்று எழுந்து
ஓடியும், தடுமாறியும், திரிந்தும், தளர்வடைந்து
உடல் கூனி, தடியுடனே நடந்து, இழிவைத் தரும் கோழை மிக்க குப்பை
யான உடலான இதை மகிழ்ந்து (விரும்பி) பூமியில்
நாணம் உறும்படியாக, விதிப்பிரகாரம் செய்வதான இந்த உலக மாயத்தில்
உண்டாகும் கொடிய நோய்கள் நீங்கி, உனது அழகிய திருவடியையே பெறு
மாறு இன்று அருள் புரிவாயாக
சேனன் எனும் பட்டப் பெயருடைய சமண குருமார்கள் இருந்த மதுரையில்
அன்று ஞானத் தமிழ் நூல்களாகிய தேவாரப் பாடல்களைப் பாடிக் கூட்டமான
சமணர்களைக் கழுவின் மேல் ஏறும்படி
திடத்துடன் திருநீற்றைத் தந்து பரப்பி மீன் கொடி ஏந்தும் பாண்டிய
னுடைய உடலில் சேர்ந்த கொடிய சுரநோய் தீர அருட் சுரந்த குருநாதனே
(வள்ளிமலை) காட்டில் இருந்த சிறுமானாகிய வள்ளியை நினைந்து தினைப்
புனத்தின் மீது நடந்து சென்று, தாதறகிளியாம் அவளோடு பேசியும், வில் ஏந்திய
வேடர்கள்
காணும்படியாக வேங்கை மரமாய் வளர்ந்து நின்றும், அந்த தனக்
குற மானாகிய வள்ளியைத் திருமணம் செய்து சீகாழிப் பதியில்
அமர்ந்து மகிழும் பெருமானே

(234) ராகமாலிகை · கல்யாணி) 234 (-) ஆதி (33)

சருவி இகழ்ந்து மருண்டு வெருண்டுறு
சமயமும் ஒன்றில என்ற வரும், பறி
தலையரு நின்று கலங்க விரும்பிய தமிழ்கூறும்

சவிகையு நன்றியும வென்றிய மங்கள
பெருமைகளும், கணமும், குணமும், பயில்
சரவணமும், பொறையும், புகழும், திகழ் தனிவேலும்

விருது துலங்க சிகண்டியில் அண்டரும்
உருகி வணங்க வரும் பதமும், பவ
விதரணமும், திறமும், தரமும், திணை புனமானின்

ம்ருகமத குங்கும கொங்கையில் நொந்து அடி
வருடி மணந்து புணர்ந்ததுவும், பல
விஜயமும் அன்பின் மொழிந்து மொழிந்து இயல் மறவேனே

ஷண்முகப்ரியா

கருதி இலங்கை அழிந்து விடும்படி
அவுணர் அடங்க மடிந்து விழும்படி
கதிரவன் இந்து விளங்கி வரும்படி விடுமாயன்
கடகரி அகசி நடுங்கி வருந்திட
மடுவினில் வந்து உதவும புயல் இந்திரை
கணவன் அரங்க முகுந்தன் வரும் சகடு அறமோதி

மதப் போராட்டத்தில் ஒருவரை இகழ்ந்தும், மருட்சி அடைந்தும், (விளக்கமின்றி மயங்கியும்) கோபித்தும் வருவதான சமயங்களும், சமயம் (தெய்வம்) என்பதே ஒன்று இல்லை என்பவரும், பறிதலையராம சமண மதத்தவரும் - இவ்வாறு யாவரும் நின்று கலங்கும்படியாக, யாவரும் விரும்பத் தக்க தமிழ்ப்பாடல்களைச் சொல்லும்

செல்வாக்கையும், உபகார குணத்தையும், வெற்றியையும், மங்களகரமான (பல) பெருமைகளையும், சீர்மையையும், நற்குணத்தையும், நீ குழந்தையாய் பயின்ற சரவண தீர்த்தத்தையும் (மடுவையும்) உனது பொறுமையையும், புகழையும், விளங்கும் ஒப்பற்ற வேலாயுதத்தையும்

வெற்றிச் சின்னங்கள் விளங்க மயில் மீது, தேவர்களும் மனம் உருகி வணங்கும்படியாக வருகின்ற திருவடியையும், உனது பல விதமான (விதரணமும்) கொடைப் பெருமைகளையும், சாமர்த்தியத்தையும், தகுதியையும், தினைப்புனமான- வள்ளியின்

கஸ்தூரி, செஞ்சாந்து அணிந்துள்ள கொங்கையில் நொந்து, திருவடியை வருடி (கால் பிடித்து) மணம் செய்து அவளை அணைந்து நின்றதையும், பின்னும் பல வெற்றிச் செயல்களையும் அன்புடனே பல முறை எடுத்துப் போற்றித் துதித்து உனது பெருமையை என்றும் மறக்க மாட்டேன்.

(ராவணனது பிழையை) மனத்தில் எண்ணி, இலங்கை அழிந்து போமபடியும், அரக்கர்கள் யாவரும் இறந்து விழும்படியும், சூரியனும் சந்திரனும் (பழையபடி) விளக்கத்துடன் வரும்படியும் செய்த திருமால்

மத கரி (கஜேந்திரன்) பயந்து நடுங்கி வருந்திடும் மடுவினில் வந்து உதவின மேகநிறப் பெருமான், இலக்குமி கணவன், ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் முகுந்தன், தன்னைக் கொல்ல வந்த அசுரன் மாளும்படி சகடை உதைத்து மோதினார்

மருது குலுங்கி கலங்க முனிந்திடு
வரதன், அலங்கல் புனைந்தருளும், குறள்
வடிவன் ..நெடுங்கடல் மங்க நர் அம்புகை தொடுமினி
மருக, புரந்தரனும் தவம் உன்றிய
பிரமபுரந்தனிலும், குகன் என்பவர்
மனதிலும் பரிவு (3)ன்றி அமர்ந்து அருள் பெருமானே.

---

(235) ஹம்ஸநாதம் (5) 235 (ட) 2+1½+1½

தினமணி சார்ங்கபாணி என மதிள் நீண்டு சால
தினகரன் ஏயநந்த மாளிகையில் ஆரம்
செழுமணி சேர்ந்த பீடிகையில் இசை வாய்ந்த பாடல
வயிரியர் சேர்ந்து பாட இருபாலும்

இனவளை பூண் கையார கவரியிட வேய்ந்து மாலை
புழுகு அகில் சாந்து பூசி அரசாகி
இனிது இருந்து வாழும் இருவினை நீண்ட காயம
உரு பிடி சாம்பலாகி விடலாமோ
வனசரர் ஏங்க வான முகடுற ஓங்கி ஆனை
மயிலொடு பாங்கி மார்கள் அருகாத
மயிலொடு மான்கள் சூழ வன வரி வேங்கையாதி
மலை மிசை தோன்றுமாய வடிவோனே
கன சமண ஓங்கா கோடி கழுமிசை தூங்க, நீறு
கருணை கொள் பாணடி நாடு பெற, வேதக

மருதமரம் குலுங்கி நொந்து போகக் கோபித்த வரதன், மால்- (34)
சூடியருளும் வாமன வடிவமூர்த்தி, பெரிய கடல் நொந்து வாட்டமுற
ஒரு அம்பைக் கையால் தொட்ட பராக்ரமசாலி (ஆகின்ற திருமாலின்)
மருகனே! இந்திரன் தவம் பொருந்திச் செய்த சீகாழி என்னும்
தலத்திலும், குகன் எனபவர் மனத்திலும் அன்பு பொருந்தி அமர்ந்து
அருளும் பெருமாளே

235

(235)

சூரியன், திருமால் என்று சொல்லும்படி மதில நீளமுள்ளதாய், மிகவும்
சூரியன் ஒளியை பொருந்திய மாளிகையில் முத்தாலும்
அழகுள்ள ரத்னமணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட பீடத்திலே அமர்ந்து இசை
பொருந்திய பாடல்களைப் புகழ்ந்து பாடுவோர் (பாணர்) ஒன்று கூடிப் பாடவும்
இருபக்கங்களிலும்

ஒரு மாதிரியான வளையல்களைப் பூண்ட கையை உடைய மாதர்கள் கவரி
வீச, மாலைகளைச் சூடி, புனுகு, அகில் சந்தனம் இவைகளைப் பூசிக்கொண்டு, அரசு
இன்பமாய திருமாப்புடன் வாழ்கின்ற இருவினைக்கு ஈடான இந்தப் பெரிய
உடலானது (ஈற்றில்) ஒரு பிடி சாம்பலாகி அழிந்து படலாமோ!

வேடர்கள் அதிசயித்து ஆரவாரிக்க, வானத்தின் உச்சியைத் தொடும்படி
வளர்ந்து (தான்) ஆசையாய் வளர்த்த மயிலும் தோழிகளும் அருகில் இருக்க
மயில்களும் மான்களும் சூழ, செழித்துள்ள உயர்ந்த வேங்கை மரமாகி
மலைமேலே தோன்றின மாய வடிவோனே!

பெருத்த சமண உலைமையர்கள், பலரும் கழுவின் மேல் தொங்க, திருநீறு,
உன கருணைக்குப் பாத்திரமான பாண்டிநாட்டில் பரவ, வேதப் பொருள் கொண்

கவி தரு காந்த பால, கழுமல பூந்த ராய
கவுணியா வேந்த தேவர் பெருமானே.

(236) பந்துவராளி (7) (ஃ) 1300 236

பூ மாது,உரமே அணி மால், மறை
வாய் நால் உடையோன், மலிவானவர்
கோமான, முநிவோர் முதல் யாரும், இயம்பு வேதம்
பூராய மதாய் மொழி நூல்களும்
ஆராய்வது இலாத அடல் அசுரர்
பேரால் மறைவாய் உறு பீதியின் அழுந்து கூடி
நீமாறு அருளாய் என ஈசனை
பாமாலைகளால் தொழுதே, திரு
நீறு ஆர் தரு மேனிய, தேனியல் தொன்றைமொடு
நீர் ஊர் தரு சானவி மா மதி
காகோதரம் மாதுளை கூவிளை
நேரோடம விளா முதலா சடை எமபிரானே
போமாறு இனி வேறெது ஓதெனவே
ஆர் அருளால் அபார ஈதரு
போர வேலவ நீல கலாவி இவாநது நிரு
பூலோகமொடே அறு லோகமும்
நேர் ஆர நொடியே வருவோய், சுர
சேனைபதி ஆயவனே உனை அன்பினொடுமே

பாடல்களை அருளிய நீறு கொள் மேனியனே! பாவலனே! கமலம்,
பூந்தராய் எனப் பெயர்கள் உள்ள சீகாழிப் பதியனே! கவுணியர் குலத்தவனே!
அரசே! தேவர் பெருமானே

236

236 தாமரையில் வீற்றிருக்கும் லக்ஷ்மியை, மார்பிடத்தே வைத்துள்ள திருமாலும் வேதம் சொல்லும் வாய் நான்கு உடையவனாகிய பிரமனும், கூட்டமான தேவர்களின் தலைவனான இந்திரனும், முனிவர்கள் முதலான யாவரும், சொல்லப்படும் வேதப் பொருளை

ஆராய்ச்சியுடன் கூறும் நூல்களில் ஆராய்ச்சி செய்யாத வலிய அசுரர்கள் செய்யும் போருக்குப் பயந்து மறைந்து, தாம் கொண்ட பயம் காரணமாக வந்து ஒன்று கூடி (இங்கே வந்து)

நீ மாறு (அந்த அசுரர்களாம் பகைவர்களை அழிக்க வல்ல ஒரு) பகைவனை தந்து அருள என்று ஈசனை நாமங்கள் பாடித் தொழுது, திருநீறு விளங்கும் மேனியனே! தேன் பொதியும் கொன்றைப் பூவுடனே

நீர் அழகுடன் ததும்பும் கங்கையையும், சிறந்த நிலவையும், பாம்பையும், மாதுளம் பூ, வில்வம், (நேரோட்டம்) நாவல் இலை, விளா இலை முதலியன நிறைந்துள்ள சடையணி எம் பெருமானே!

(எங்களுக்கு) உயர்ந்து போகும் வழி, இனி (உன்னை அறிய) வேறு எது உளது, சொல்லி அருளுக என்று முறையிடவே, நிறைந்த கருணை அருளால், அந்த சிவபெருமான் ஈந்தருளிய போர் வேலவனே! நீலத் தோகை மயிலில் ஏறி நீண்ட

இந்தப் பூலோகத்துடனே பாக்கி ஆறு லோகங்களையும், நேராக ஒரே நொடிப் பொழுதில் சுற்றி வந்தவனே! தேவர்களின் சேனாதிபதியானவனே

உன்னை அன்பினில்

காமா, அறு சோம ஈம ஆனன,
தாமா மணம் ஆர் தரு நீப
சுதாமா எனவே துதியாது உழல் — வஞ்சனேன் எனைக்

காவாய, அடிநாள் அசுரேசரையே
சாடிய கூர் வடி வேலவ
கார் ஆர் தரு காழியின் மேவிய — தம்பிரானே.

237

சேலம்

(237) கானடா (8) ப்ருஹதி

பரிவுறு நார் அறுது, அழல் மதி வீசச்
சிலை பொரு கால் உறு — அதனாலே
பணிபடு சோலைக் குயில் அது கூவக்,
குழல் தனி ஓசைத் — தரவாலே
மருவியல் மாதுக்கு இரு கயல் சோரத்
தனி மிக வாடித் — தளராதே

மணம் உற வாழத் திருமணி மார்பத்து
அருள் முருகா உற்று — அணைவாயே
கிரி தனில் வேல் விட்டு இரு தொளையாகத
தொடு குமரா, முத் — தமிழோனே
கிளர் ஒளி நாதர்க்கு அரு மறைகித்
திரு வளர் சேலத்து — அமர்வோனே

மன்மத அழகு உடையவனே! ஆறு (பூரண) சந்திரனுக்குச் சமமான திருமுகங்களை உடையவனே! (மணம ஆர் தரு நீப தாமா) மணம் நிறைந்து வீசும் கடப்பமாலை அணிந்தவனே! (சுதாமா) நல்ல ஒளியை உடையவனே! என்றெல்லாம (உன்னை) துதிக்காமல் திரிகின்ற வஞ்சகனாகிய என்னை காத்தருளுக! முன்பு அசுரர் தலைவர்களாகிய சூரன் முதலானவர்களை சங்கரித்த கூரிய வேலாயுதத்தை உடையவனே! மேகங்கள் நிறைந்துள்ள சீகாழியில் வீற்றிருக்கும் தம்பிரானே!

சேலம் 237

(237) இரக்கம் கொண்ட (நரர்) அன்பு சற்றும் இல்லாமல், (அழல்) நெருப்பை நிலவு வீசுவதாலும், (சிலை) பொதிய மலையினின்றும் பொருந்தி வரும் (கால) தென்றற் காற்று வந்து மேலே படுவதாலும் குளிர்ச்சியுள்ள சோலையிற் குயில் கூவுதலாலும், புல்லாங்குழல் ஒப்பற்ற இன்னிசையைத் தருவதாலும்

தனியே பொருந்திய தன்மையில் உள்ள இந்தப் பெண், தனது இரண்டு (கயல் மீன் போன்ற) கண்களும் சோர்வுறும் படித் தனியே கிடந்து வாட்டமுற்றுத் தளர்ச்சியுறாமல்

மனம் ஒருமைப்பட்டு (நிம்மதியாக) வாழ (உனது) ரத்னமாலையணிந்த மார்பிடத்தே, கிருபாகரனே முருகா - நீ வந்து அணைத்தருள்வாயாக. கிரௌஞ்ச கிரி மீது வேலாயுதத்தைச் செலுத்தி அது பெருந் தொளைபடும்படி செய்த குமரனே! இயல் இசை நாடகம் எனப்படும் முத்தமிழ்ப் பெருமானே பேரொளிச் சொரூபமாம் சிவபெருமானுக்கு ஒப்பற்ற மகனாகி, லக்ஷ்மீகரம் பெருகி ஓங்கும் சேலம் என்னும் பதியில் வீற்றிருப்பவனே!

பொருகிரி சூரக் கிளையது மாளத
    தனிமயில் ஏறித்   திரிவோனே
புகர்முக வேழக் கணபதியாருக்கு
    இளைய விநோதப்   பெருமாளே

சோமநாதன் மடம் 238

(238) செகுசுருட்டி (5½) (ம) 2+2+1½

ஒரு வழி படாது, மாயை இரு வினை விடாது, நாளும்
    உழலும், அநுராக மோக   அநுபோகம்
உடலும் உயிர் தானுமாய் உன் உணர்வில் ஒரு கால் இராத
    ஊழும் நெகிழ்(வு)ஆகுமாறு   அடியேனுக்கு
இரவு பகல் போன ஞான பரமசிவ யோக தீரம்
    என மொழியும், வீசு பாச   கன கோப
யமபடரை மோது, மோன உரையில் உபதேச வாளை
    எனது பகை தீர நீயும   அருள்வாயே

அரிவை ஒரு பாகம ஆன அருணகிரிநாதர் பூசை
    அடைவு தவறாது பேணும   அறிவாளன்
அமரர் குல காவலனும அரிய தவ ராஜ ராஜன
    அவனி புகழ சோமநாதன   மடம் மேவும்
முருக, பொருதரர் சேனை முறிய வட மேரு வீழ
    முகர சலராசி வேக   முனிவோனே

போருக்கு எழுந்த எழுகிரியும், சூரனும் அவன் சுற்றத்தாருமே மடிய, தயவற்ற
அந்த சூரனும் மயில் மீதேறி (உலகை) வலம் வந்தவனே)
புள்ளியை உடைய முகத்தைக் கொண்ட யானையின் திருமுகத்தைக் கொண்ட
விநாயகப் பெருமானுக்கு இளைய அற்புதப் பெருமானே!

சோமநாதன மடம் 238

238) ஒரு வழியில் நிலைத்து நிற்க முடியாமல், மாயைகளும் இருவினைகளும்
என்னை விடாமல், நாள் தோறும் அலைச்சல் தருகின்ற காம விலை மோக
அனுபோகத்திற் பட்டு,

உடலும் உயிருமே எனதாய், உன் (நீ உள்ளாய் என்னும்) உணர்ச்சி ஒரு
கருவும் இல்லாத என உள்ளமும் நெகிழ்ந்து கசியும்படி, அடியேனுக்கு
இரவும் பகலும் கடந்த ஞான பரமசிவ யோகமே (ஸ்ரீமத்) தைரியத்தைத் தருவது
என மொழிவதும், வீசும் பாசக்கயிற்றையுடைய பெருத்த கோபம் உள்ளவர்களான
யம தூதர்களை மோதி வெருட்ட வல்லதுமான மௌன நிலையதாய பேச்சு இல்லாததான
(ஞான) உபதேசம் என்கின்ற வாளை எனது உட்பகை புறப்பகை - மல மாயா கன்மங்கள்
யாவும் ஒழிந்து போக நீயும் (தயை கூர்ந்து) அருள்வாயே

தேவியை ஒருபாகத்தில் கொண்ட அருணசலேச்வரரின் பூஜையை (முறை) ஒழுங்கு
தவறாமல் விரும்பிச் செய்கின்ற அறிவாளியும்,
சமணர் குலத்துக்குக் காலனாகத் தோன்றியவரும், அருமையான தவ ராஜ ராஜருமான
உலகம் புகழும் 'சோமநாதன்' மடத்தில் வீற்றிருக்கும்
முருகனே! சண்டை செய்த சூராதியவுணர்களின் சேனை முறிபட்டு அழியவும்
வடக்கில் உள்ள மேருமலை பொடிபட்டு விழவும், (முகடு) பேரொலி செய்யவும்
கடல் வெந்து வற்றவும் கோபித்தவனே!

மொழியும் அடியார்கள், கோடி முறை கருதினாலும், வேறு
முனிய அறியாத தேவர் பெருமாளே

சோமீச்சுரம் 239

(239) மாண்ட் (35) (ப) 14/4/40

உரிய தவ நெறியில் நம நாராயணாய என
ஒரு மதலை மொழி அளவில் ஓராத கோபமுடன்
உனது இறைவன் எதனில் உளன் ஓதாயடா எனும் முன்
உறு தூணில
உரம் உடைய அரி வடிவதாய் மோதி வீழ விரல்
உகிர் புதைய இரணியனை மார் பீறி வாகை புனை
உவணபதி நெடியவனும் வேதாவும் நாணமுறும் உயர் வாகு

வரி அளிகள் இசை முரல, வாகான தோகை இள
மயில் இடையில நடனமிட, ஆகாசம் அருவ
வளர் கமுகின் விரி குலைகள் பூண ஆரம் ஆகி இட, மதில தருமம்

மருது அரசர் படை விடுதி வீடாக நாடி மிக
மழ விடையின் மிசை இவரும் சோமீசர் கோயில் தனில்
மகிழ்வு பெற உறை முருகனே பேணு(ம) வானவர்கள் பெருமானே

உன்னைத் துதிக்கும் அடியார்கள், கோடிக்கணக்கான (எண்ணிறந்த) குறைகளைக் கூறி உன்னிடம் முறையிட்டாலும், அவர்களின் எண்ணத்திற்கு மாறாக (மாறுபட்டு) அவர்கள் மீது கோபிப்பது என்பதையே அறியாத தேவர்கள் பெருமானே! 38

சோமீச்சுரம் 239

(239)

சரியான தவநெறியிலிருந்து "நம நாராயணாய" என்று குருபிள்ளை (பிரஹலாதன்) சொன்னவுடனே, ஆராய்ச்சி அறிவு இல்லாத கோபத்துடன் 'உன் கடவுள் எதனில் உள்ளான் சொல்லடா' என்று கேட்டு முடியுமுன்னே அங்கிருந்த தூணிலிருந்து

வலிமையுடைய (நர) சிங்கத்தின் உருவமாய் (இரணியன் மேல்) மோதி அவனை விழச்செய்து தனது விரல்களின் நகம் புதைய அவனுடைய மார்பைக் கீறிப் பிளந்து வெற்றி கூடினவனும், கருடனுக்குத் தலைவனும், நெடியவனும் ஆன திருமாலும், பிரமனும், நான்கு வேதங்களும் மேன்மை பெற

ரேகைகள் உள்ள வண்டுகள் இசை எழுப்ப, அழகான தோகையுள்ள இள மயில் நடுவில் நடனம் செய்ய, ஆகாயத்தையும் ஊடுருவிச் செல்லும் அளவுக்கு வளர்ந்துள்ள கமுக மரத்தின் விரிந்த குலைகள் பூணுதற்குரிய ஹாரம் போல விளங்க, மதில் சூழ்ந்துள்ளதும்

மருத நிலத்து மன்னர்கள் பாசறை விடுதிகளுக்குத் தக்கதாம் என மிக விரும்பத்தக்கதான சோமீசர் கோயிலின் திண்மை வாய்ந்த இடபத்தின் மேல் எழுந்தருளிவரும் சோமீசர் என்னும் திருநாமமுடைய சிவபெருமானது கோயிலில் மகிழ்ச்சியுடன் உறையும் முருகனே! விரும்பி நிற்கும் தேவர்கள் பெருமானே

இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையும் வனமழகு புனை ஈராறு தோளு நிரையும்
இருபதமும் அறுமுகமும் யான் ஓத ஞானமதை அருள்வாயே.

தனிச்சயம் 240

(240) சங்கராணந்தப்ரியா மு ¾ ஆதி

உரைத்த சம்ப்ரம வடிவு திரங்கிக்
கறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்து
உலர்த்திடும செவி செவிடுற கண் கட குருடாகி
உரத்த வெண்பலு(ம) நழுவி,மதங் கெட்டு
இரைத்து கிண் கிணென இருமல் எழுந்திடு
உளைப்புடன் தலை கிறுகிறு எனும் பித்தமும மேல் கொண்(டு)
ரதமின்றிய புழுவினும் விஞ்சிப்
பழுத்(து),உடம் செயல் வசனம வரம்(பு) அற்று
அடுத்த பெண்டிரும் எதிரவர நிந்தித்து அனைவோரும்
அகத்தன் என்றிட உணர்வது குன்றித்
துடிப்பதுக, சிறிது உளது,இலது என்கைக்கு,
அவத்தை வந்து,உயிர அலமரும் அன்றைக்கு அருள் வாயே
திரித்தி ரிந்திரி ரிரிரிரி ரின்றிட்
டுடடு டுண்டுடு டுடுடுடு டுண்டுட்
டிகுடடி குணடிகு டிகு டிகு டிணடிட் டிகு திதோ
திமித்தி மிந்திமி திமி திமி எனறிட்
திடக்கை தந்துமி முரசு முழவுதச
செருக்களம் தனில நிருதர தயர்கச் சிவபேய்கள

இரவில் தூங்கினாலும், யாருடனாவது பேசிக்கொண்டு இருந்தாலும், உன்னுடைய
ளைமையையும், அழகு பூண்டுள்ள பன்னிரண்டு தோள் வரிசையையும், இரண்டு
திருவடிகளையும், ஆறு முகங்களையும் நான் ஓதும்படியான ஞானத்தை அருள்வாயே

தனிச்சயம் 240

40) எல்லாரும் புகழும்படியாக (சம்ப்ரமமாக) மிக அழகாக இருந்த வடிவமானது
அங்கங்கள் உற்று (சுருங்கலுற்று), கறுப்பாயிருந்த தலைமயிரும் வெளுத்துப்
போய் பஞ்சுபோலாகி, நுணுக்க ஒலிகளை கேட்டுக் கொண்டிருந்த காது செவிடாகி
ஒளி பொருந்தியிருந்த கண் குருடாகி

பலத்துடன் அழுத்தமாயிருந்த வெண்ணிற பற்களும் நழுவி விழுதலுற்று,
மத்த) நான் என்றிருந்த இறுமாப்பு நிலை அழிந்து, மூச்சு வாங்கி, கிண் கிண் என்னும்
ஒலியுடன் இருமல் உண்டாகி வேதனையுடன் தலை கிறுகிறு என்னும் பித்தம் மேல கொண்டு எழ
ரத்தம் இல்லாத புழுவைக் காட்டிலும் அதிகமாக (உடல்) வெளுத்து, மனம், செயல்,
வாக்கு இவைகள் ஒரு அளவு கடந்து (ஒழுங்கீனமான நிலையை அடைந்து) சேர்ந்
துள்ள மாதர்களும் எதிரே வர இகழ்ந்து தூஷித்து, யாவரும் (இவன்)
அசுத்தன் என்று சொல்லும்படியாக, உணர்ச்சி குறைந்து போய், நாடி துடிப்பதும்
சிறிது இருக்கின்றது, இல்லை என்றே சொல்லலாம் என்னும்படியான கஷ்ட
நிலை வந்து கூடி, உயிர் வேதனைப் படும் அந்த நாளில் நீ எனக்கு அருள் புரிவாயாக.

திரிதத்தி ரிதத்திரி திரிரிரி ரிந்திட டுடுடு டுண்டுடு டுடுடு டுண்டுட் டிகுடடி குண்டிகு
டிகு டிகு டிண்டிட் டிகு திதோ

திமித்தி மிதிதிமி திமிதிமி என்று ஒலிக்கும்படி, இடக்கை துந்துமி
(பேரிகை) முரசு இவை யெல்லாம் ஒலிக்க, போர்க்களத்தில் அசுரர்கள்
திகைக்க - கலக்கம் கொள்ள, சில பேய்கள்.

தரித்து மண்டையில் உதிரம் அருந்தத்
திரட் பருந்துகள் கூடர்கள் பிடுங்கத்
தருக்கு சம்புகள் நிணமது சிந்தப் பொரும் வேலா
தடச் சிகண்டியில், வயலியில், அணையைப்
படைத்த நெஞ்சினில் இயல் செறி கொங்கிற்
தனிச்சயம் தனில் இனிதுறை கந்தப் பெருமாளே.

திருக்கடவூர் 241

(241) பைரவி (6) (-¼) ஆதி - 2 களை

ஏட்டின் விதிப்படியே கொடு மாபுர
வீட்டில் அடைத(்து) இசைவே தசை தோலில்
ஏற்றி அடைத்திடவே கடல் ஓடமது என ஏகி
ஏற்கும் எனப், பொருளாசை பெணாசை, கொ
ளாத்து எனத் திரியா பரியா, தவம்
ஏற்றி, இருப்பிடமே அறியாமலும் உடல் பேணிப்
கூட்டு சரப்பணியே மதனம் என
ஆட்டி அசைத(்து) இயலே திரி நாளில்
சூதத மலக் குகையோ பொதி சோறென கழு காகம்
போற்றி நமக்கு இரையாம எனவே கொள,
நாட்டில் ஒடுக்கெனவே விழு போதினில,
பூட்டு பணிப் பதமா மயிலா, அருள புரிவாயே
வீட்டில் அடைத்து எரியே இடு பாதகன
நாட்டை விடுத்திடவே பல குதினில
வீழ்த்த விதிப்படியே குரு காவலா வனமே போய

மண்டை ஓட்டை எடுத்து ஏந்தி அதில் ரத்தத்தைப் பிடித்துப் (40)
பருக, கூட்டமான பருந்துகள் குடல்களைப் பிடுங்க, களிப்புறும
நரிகள் தாம் உண்ணும் மாமிசத்தைக் கிழித்துச் சிதற போர் செய்த வேலனே.
(குடம) பெருமை வாய்ந்த மயில் மீதும், வயலூரிலும், அன்பு பொருந்
தியுள்ள அடியார்களின் நெஞ்சத்தும், தகுதி நிறைவுற்ற கொங்கு
நாட்டில் தனிசயம் என்னும் தலத்திலும் இன்பத்துடன் உறையும் கந்தப் பெருமானே.

திருக்கடவூர் 241

(241) பிரமனது ஏட்டில் கண்ட விதியின் பிரகாரம் (இந்த உயிரைக்) கொண்டு
போய் நல்ல (புரம) உடலாகிய ஒரு வீட்டிலே சேர்த்துப் பொருந்தவே, அடிக்கும்
சவுக்குப் போன்ற மூன்று (இடை, பிங்கலை, சுழுமுனை) என்னும் நாடிகளை அதில்
பொருத்தி, அடித்துச் செலுத்தக், கடலில் படகு ஓடுவது போலக் காலம் கழித்து,
நல்லதென்று பொருளாசை பெண்ணாசை கொண்டு, தூ தூ என்று பலர்
இகழத் திரிந்தும் வருந்தியும், தவம் சேர்ந்துள்ள இருப்பிடம் இன்ன
தென்றே அறியாமலும் இவ்வுடலை விரும்பிப் பாதுகாத்து

பூட்டப்பட்ட சரப்பளியே (வயிரமுழுதகிய கழுத்தணி) விளங்க மன்மதன்
இவன என்னும்படி ஆட்டியும், அசைத்தும், ஒய்யாரத் திரிகின்ற காலத்தில்,
நிரம்பின மலஞ்சோர்ந்த குகையோ இது, பொதி சோறே இது என்று கழுகும், காக
(மும்) விரும்பி இவ்வுடல் நமக்கு இரையாம் என்று கொள்ளும்படி, பூமியில் பொக்கென்று
விழுகின்ற அச்சமயத்தில், அழுத்திக் கட்டி வைத்துள்ள பாம்பைக்
காலிற் கொண்ட அழகிய மயிலனே! அருள புரிவாயாக -

அரக்கு மாளிகையில் இருக்கச் செய்து எரியிட்ட பாதகனும் துரியோதனனுடைய
நாட்டை விட்டுப் போகும்படி பல சூதாட்டங்களில் ஏற்பட்ட விதிப்பிரகாரம்
ஒருங்கு அரசாம (ஐவரும்) காட்டுக்குப் போய்